
# கல்வெட்டு
# Kalvettu

திருவள்ளுவராண்டு 2038 (விய ஆண்டு) தைத்திங்கள்



பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு தங்கம் தென்னரசு அவர்கள் 16-08-2007 அன்று துறை நூற்களை வெளியிட்டுச் சிறப்பித்தார்கள்.

கல்வெட்டு - காலாண்டிதழ் : 73 (ஜனவரி 2007) விலை ரூ. 10.00
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை - 600 008.



தாளச்சக்கரம்

இத் தாளச்சக்கரமும், கல்வெட்டும் நெல்லையப்பர் கோயில் மூன்றாம் திருச்சுற்றிலுள்ள ஆறுமுக நயினார் சன்னதியின் முன்புள்ள மண்டபத்தின் தரையில் பொறித்து வைக்கப்பட்டுள்ளது. விரிந்த தாமரை வடிவிலிருக்கும் இக்கல்வெட்டில் 1 காகபதம் 2 விராமம் 3 துருதம் 4 இலகு 5 குரு 6 புலுதம் என தாளத்தின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

பிறை, மதி, கணை, வில், பாம்பு, புள்ளடி என்ற மாத்திரைகளின் பெயர்கள் குறியீடுகளாகத் தரப்பட்டுள்ளன.

இத்தாளங்கப் பிரமாணத்தை நிரூபித்துக் கல்வெட்டாக வெட்டிய செய்தி தாளச்சக்கரத்தின் கீழே கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

அது வருமாறு:

மதுரை பரத வித்துவான் கெங்கை
முத்துப் பிள்ளையவர்கள் சிஸ்யர்க
ளிலொருவராகிய பசுவந்தனை சி
பிச்சாண்டி அண்ணாவியால் இ
த் தாளங்க ப்ராமணம் நிரூபிக்
கப்பட்டது.
1045 சித்தார்த்தி வருஷம் புரட்டா
சி மீ 4உ குருவாரம்

**தகவல்:**

முனைவர் மா.செந்தில் செல்வக்குமரன், இளமுனைவர் சொ. சந்திரவாணன், செ. உலகையா

முனைவர் சீதாராம் குருமூர்த்தி இ.ஆ.ப.,
முதன்மை ஆணையர்
தொல்லியல் துறை

தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஹால்ஸ் சாலை,
எழும்பூர், சென்னை-600 008.
06-09-2007

# பதிப்புரை

தொல்லியல் துறையின் 73-ஆவது இதழாக வெளிவரும் இக்காலாண்டிதழ் அடிப்படைச் சான்றுகளைக் கொண்டு எழுதப்பட்ட கட்டுரைகள் மற்றும் செய்திகளின் தொகுப்பாகும்.

தென்பாண்டி நாட்டில் சீனத்து வணிகர்கள் என்ற கட்டுரையில் சங்க காலம் முதல் தமிழகத்துடனான சீனத்து வணிகம் பற்றித் தொல்பொருள், கல்வெட்டு, ஓவியச் சான்றுகளுடன் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

சமய ஒற்றுமைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திருநாகேசுவரம் நாகநாதசுவாமி கோயிலில் உள்ள கல்வெட்டினைச் சான்று காட்டி விளக்கம் தரப்பட்டுள்ளது.

பண்டமாற்று முறை பற்றியும் அவற்றுள் தலைமாறு, பரிவர்த்தனை என்ற சொற்களுக்கு விளக்கமும் கல்வெட்டுச் சான்றுகளும் காட்டி ஒரு கட்டுரை வந்துள்ளது.

இந்தியத் தொல்பழங்காலத்தின் தந்தை என்று போற்றப்படும் இராபர்ட் புரூஸ் பூட் அவர்களின் கல்லறை பற்றிய கல்வெட்டுச் செய்தியும், குமரி முட்டம் இசுலாமியப் பள்ளி பற்றிய கல்வெட்டும், கல்வெட்டில் இறைப் பணியாளர்கள் என்ற கட்டுரையும் புதிய செய்திகளைத் தரவல்லன.

மேலும் அண்மையில் புதியதாகக் கண்டறியப்பட்ட சிற்பங்கள், கல்வெட்டுகள் என அரிய செய்திகளையும் இவ்விதழில் வெளியிட்டுள்ளோம்.

மற்றொரு சிறப்பு நிகழ்வாகத் துறையின் பணிகளை ஆய்வு செய்யவும், துறை நூல்களை வெளியிட்டுச் சிறப்பிக்கவும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு தங்கம் தென்னரசு அவர்கள், துறைக்கு வந்தபோது பல புதிய வரலாற்றுச் செய்திகளை மிகவும் ஆர்வத்துடன் கேட்டறிந்தார்கள் என்பதை இங்கு மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, மேற்சொல்லப்பட்ட அனைத்துப் புதிய செய்திகளும் பெரும் பயனுடையவையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இதனை வரலாற்று ஆய்வாளர்களும், ஆர்வலர்களும் படித்துப் பயனுற வேண்டும் என்பதே என் ஆவல்.

*சீதாராம் குருமூர்த்தி*
முதன்மை ஆணையர்

உள்ளே . . .


| வ.எண் | | பக்கம் |
|---|---|---|
| | பதிப்புரை | |
| 1. | தென்பாண்டி நாட்டில் சீனத்து வணிகர்கள் — முனைவர் மா. செந்தில்செல்வக்குமரன் | 1 |
| 2. | இந்து - முஸ்லீம் ஒற்றுமை சொல்லும் கல்வெட்டு — நா. இரவிரங்கசுவாமி | 5 |
| 3. | தலைமாறு - பரிவர்த்தனை — இரா. சிவானந்தம் | 8 |
| 4. | வடசிறுவளூர்க் கல்வெட்டுகள் — ப. பூபாலன் | 18 |
| 5. | சங்கரன்பந்தல் - தொல்லியல் கள ஆய்வு - கண்டுபிடிப்புகள் — கோ. முத்துசாமி | 20 |
| 6. | திருநெல்வேலி அருகில் புதிய கற்காலக் கருவி கண்டுபிடிப்பு — மா. செந்தில்செல்வக்குமரன், சொ. சந்திரவாணன் | 23 |
| 7. | இராபர்ட் புரூஸ் பூட் கல்லறை — ச. செல்வராஜ் | 25 |
| 8. | குமரி முட்டம் கல்வெட்டில் இசுலாமியப் பள்ளி — தே. கோபாலன் | 29 |
| 9. | கீழக்கல்லூர் படித்துறைக் கல்வெட்டு — செ. உலகையா | 35 |
| 10. | கல்வெட்டில் இறைப் பணியாளர்கள் (அடிமைகள்) — இளமுனைவர். சொ. சந்திரவாணன் | 37 |

# 1

# தென்பாண்டி நாட்டில் சீனத்து வணிகர்கள்

முனைவர் மா. செந்தில்செல்வக்குமரன்
தொல்லியல் அலுவலர், திருநெல்வேலி

தென்பாண்டி நாட்டுத் துறைமுகங்கள் சங்க காலந்தொட்டு வெளிநாட்டு வாணிபத்தில் பெரும்பங்கு வகிக்கின்றன. அவற்றுள் கொற்கை, பழையகாயல், காயல்பட்டினம், குலசேகரப்பட்டினம், தூத்துக்குடி ஆகியவை குறிப்பிடத்தக்கவை. சங்க காலத்தில் சிறந்து விளங்கிய கொற்கைத் துறைமுகம் பின்னர் கடலில் ஏற்பட்ட மாற்றங்களால் தன்னியல்பு திரிந்தது. எனினும் இதன் அருகில் இருந்த பிற துறைமுகங்கள் சிறந்து விளங்கத் தொடங்கின.

13-ஆம் நூற்றாண்டில் பழையகாயல் சிறந்த துறைமுகமாக விளங்கியது. அக்காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்ட மன்னன் முதலாம் மாறவர்மன் குலசேகரன் ஆவான். 'எம்மண்டலமும் கொண்டருளிய' என்ற சிறப்பு வெற்றிப் பெயரினைப் புனைந்து கொண்ட இம்மன்னன், வெளிநாட்டு வணிகர்களை மிகுந்த அக்கறையுடன் வரவேற்று, அவர்களுக்கு சிறந்த வசதிகள் செய்து கொடுத்தான். ஆதலின் இங்கு வந்து வாணிபம் செய்ய வெளிநாட்டு வணிகர்கள் பெரும் விருப்பம் கொண்டனர் என்று 'மார்கோபோலோ' தமது பயண நூலில் கூறியுள்ளார்.

அவர் கூற்று சரியானது என்று கூறும் வகையில் பல தொல்லியல் சான்றுகள் இப்பகுதியில் கிடைத்துள்ளன. இக்காலக் கட்டத்தில் சீன தேசத்தை ஆண்டு வந்தவன் 'குப்பளேய்கான்' என்ற மன்னன் ஆவான். அவன் வெளிநாடுகளைப் பற்றி தெரிந்து கொள்வதில் பெரும் விருப்பமுடையவனாக இருந்தான் என்று மார்கோபோலோ குறிப்பிடுகிறார். அவன் காலத்தில் சீன நாடு பல நாடுகளுடன் வாணிபத்தில் கொண்ட தொடர்பு வளமானது. அவர்கள் 13-ஆம் நூற்றாண்டில் வாணிபத் தொடர்பு கொண்ட நாடுகளில் தமிழகமும் ஒன்றாகும்.

## கள ஆய்வில் சீனத்துப் பொருட்கள்

பழையகாயல் கடற்கரை அருகில் 'சூரங்காடு' என்ற ஓர் இடம் உள்ளது. அப்பகுதியில் பழங்காலத்தில் வெளிநாட்டு

வணிகர்கள் தங்கி இருந்தார்கள் என்பது மக்கள் கூற்று. அப்பகுதியில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் ஆய்வாளர்கள் கள ஆய்வு மேற்கொண்டனர். மிகுதியான சீனத்து பானை ஓடுகளைச் சேகரித்தனர். அமர்ந்த நிலையில் உள்ள சுடுமண் பெண் உருவச் சிலைகளையும் சேகரித்தனர். செப்புக்காசுகளும் சேகரிக்கப்பட்டன. இச்சான்றுகளின் மூலமாக சீனத்து வணிகர்கள் இங்கு முகாமிட்டிருந்தனர் என்பது உறுதியாகிறது. காயல்பட்டினம் அருகில் 'சீனாந்தோப்பு' என்ற இடம் உள்ளது. இப்பகுதியில் சீன வணிகர்கள் தங்கியிருந்ததால் இப்பெயர் பெற்றது என்பர் இவ்வூரார்.

கடற்கரை நகரங்களைத் தவிரப் பிற இடங்களிலும் சீனத்துப் பானை ஓடுகள் அண்மைக் கால ஆய்வுகளில் கிடைத்துள்ளன. சங்கரன்கோயில் - இராசபாளையம் சாலையில் மாங்குடி என்ற கிராமம் உள்ளது. இவ்வூர் சங்ககாலப் பழமையுடையது. மாங்குடி மருதனார் பிறந்த ஊர் இது தான் என்பர். இவ்வூரில் சங்க காலத் தொல்லியல் சான்றுகளும் கிடைக்கின்றன. இவ்வூரில் உள்ள மேடான பகுதியில் இளம் பச்சை வண்ண சீனத்துப் பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இவை 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். சீனத்து வணிகம் தென்பாண்டி நாட்டில் உட்பகுதிகளிலும் பரவியிருந்தமைக்கு இவை சான்றுகளாகின்றன. இவ்வூரின் அருகில் உள்ள கரிவலம்வந்தநல்லூரிலும் சீனத்துப் பானை ஓடுகள் கிடைத்துள்ளன. மேலும் சோழபுரம் என்ற ஊரில் சீனத்துக் காசுகள் கிடைத்துள்ளன.

தென்காசி வட்டம் ஆய்குடி அருகில் உள்ள விந்தன்கோட்டை என்ற இடம் மற்றொரு குறிப்பிடத்தக்க பகுதியாகும். இங்கு ரோமானியப் பானை ஓடுகள் கிடைத்துள்ளதோடு சிறிதளவு சீனத்துப் பானை ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அண்மையில் தென்காசி அருகில் மகராசாமடத்தூரில் சீன தேசத்து மண் பொம்மை ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இது அமர்ந்த நிலையில் உள்ள பெண் தெய்வ உருவச் சிலையாகும். இத்திரு உருவம் தாரா என்ற பௌத்த பெண் தெய்வ உருவமாக இருக்கலாம். மேலும், இவ்வூர் 13-ஆம் நூற்றாண்டில் சீனத்து வணிகத்தலமாக இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

சீனத்துப் பட்டு, சீனத்துக் களிமண் பொம்மைகள், சீனத்து ஜாடிகள் இவர்களின் விற்பனைப் பொருட்களாக இருந்திருக்க வேண்டும். இன்றும் செங்கோட்டைப் பகுதிகளில் பல வீடுகளில்

'டிராகன்' உருவம் பொறித்த ஊறுகாய் ஜாடிகள் உள்ளன. ஆத்தூர் சிவன் கோயிலிலும் டிராகன் உருவம் பொறித்த ஊறுகாய் ஜாடி உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பத்மநாபபுரம் அரண்மனையில் அதிக அளவிலான உயரமான ஊறுகாய் ஜாடிகள் டிராகன் உருவம் பொறித்தும், பொறிக்கப் படாமலும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. சீனத்துக் களிமண் ஜாடிகள் தமிழர்களின் அதிகமான வரவேற்பை பெற்றிருந்ததையும் இது காட்டுகிறது.

### திருப்புடைமருதூர் ஓவியம்

அம்பாசமுத்திரம் வட்டம், திருப்புடைமருதூர் சிவன் கோயிலின் கோபுரத்தில் உள்ள ஓவியம் சீனத்துக் கப்பல் தமிழகக் கடற்கரைக்கு வந்ததை எடுத்துக் காட்டுகின்றது. அவ்வோவியத்தின் மூலமாக சீன வணிகர்களின் உருவ அமைப்பு, ஆடை அணிகலன்கள், தொங்கும் மீசை வைக்கும் வழக்கம் ஆகியவற்றை அறிந்து கொள்ள முடிகிறது.

### நெல்லையப்பர் கோயில் திருவிழா

தென்பாண்டி நாட்டின் சீனத்து வாணிபம் சிறந்து விளங்கியதற்கு நெல்லையப்பர் கோயிலில் நடைபெற்று வந்த திருவிழா நிகழ்ச்சி ஒன்றும் சான்றாக விளங்குகிறது. திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் நடைபெறும் ஆண்டுத் திருவிழாவின் போது சாமி சப்பரங்களுக்கு முன்னால் மரத்தோணி ஒன்று ஊர் வலமாக கொண்டு செல்லப்படுவது வழக்கமாக இருந்துள்ளது. அத்தோணிக்கு மரச்சக்கரங்கள் பொருத்தப்பட்டிருக்கும். மாடுகளைப் பூட்டி அத்தோணியினை இழுத்து வருவர். அத்தோணியில் சோழிப்பல்லன் என அழைக்கப்படும் கதை கூறுபவன் ஒருவன் அமர்ந்து வருவான். அவன் தனது பற்களின் மீது சோழிகளை வரிசையாக வைத்து கட்டிய அலங்காரத்தைப் பொருத்தி இருப்பான். பொதுவாக சீனத்தவர்களுக்கு பற்கள் பெரியதாக இருக்கும். அப்பற்களை நினைவுறுத்தும் வகையிலேயே இச்சோழி பற்கள் இருந்தன எனலாம். சோழிப்பல்லன் ஊர்வலம் வரும் மரக்கலத்தைச் சிறுவர்கள் சூழ்ந்து கொண்டு அவனை கேலி செய்தபடி வருவார்கள். அவன் வேடிக்கைக் கதைகளைக் கூறிக் கொண்டு வருவான். இடையிடையே இரட்டை அர்த்தம் தொனிக்கும் ஆபாச வார்த்தைகளையும் கூறுவது உண்டு.

இந்நிகழ்ச்சி வெளிநாட்டு வணிகர்கள் கோயில் திருவிழாக்களில் கலந்து கொண்டு தங்கள் நாட்டு பொருட்களைத் தமிழகத்தில் விற்றுவந்ததை எடுத்துக்காட்டுவதாய் அமைந்துள்ளது. மேலும் அவன் தன் தேசத்தில் உள்ள அதிசயங்களைப் பற்றியும் அந்த நேரத்தில் கூறி வந்துள்ளான். தங்கள் நாட்டுப் பொருட்களை விற்றதோடு மட்டுமல்லாமல் தங்கள் நாட்டின் வரலாற்றையும், கலாச்சார சிறப்புகளையும் இந்நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறியுள்ளான் என்பதை இந்நிகழ்ச்சி எடுத்துக் கூறுகிறது.

வணிகர்கள் கடல் மூலமாகவே தங்கள் வணிகப் பொருட்களைக் கொண்டுவந்தார்கள் என்பதை நினைவுக்கூறும் வகையில் தோணி உருவில் சீனத்துக் கதையாளன் வாகனம் அமைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இத்தோணி வாகனம் நெல்லையப்பர் கோயிலில் உள்ளது. ஆனால் கதை கூறி வரும் நிகழ்ச்சி நிறுத்தப்பட்டுவிட்டது. சீனத்து வணிகர்கள் திருநெல்வேலி வரை வந்து வாணிபம் செய்ததை இந்நிகழ்ச்சி நினைவுப்படுத்துகின்றது.

## ஜெயங்கொண்டப்பட்டின சப்தமாதர்கள்

கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகில் உள்ள ஜெயங்கொண்டப் பட்டினத்தில் இரண்டு சப்தமாதர் சிற்பத் தொகுதிகள் உள்ளன. இவை கொள்ளிடம் வெள்ளப்பெருக்கில் பாதிக்கப்பட்ட கரைமேடு என்ற ஊரிலிருந்து சிவகிரி என்ற ஊருக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது இடையூறுகள் காரணமாக ஜெயங்கொண்டப்பட்டினத்தில் விடப்பட்டதாகச் செவிவழிச் செய்தியுள்ளது. இவற்றில் ஒரு தொகுதி கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. மற்றொன்று கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

முதல் தொகுதியில் வைஷ்ணவி சிற்பம் இல்லாமையால் அதற்கு ஈடாக ஒரு கல் நடப்பட்டு வழிபடப்படுகிறது. சப்தமாதர் தொகுதிகள் குடைவரைக் கோயில்களில் ஒரு பகுதியாகவும் கட்டடக் கோயில்களில் பரிவார ஆலயமாகவும் அமைவது மரபு. சில இடங்களில் ஊரின் வடபகுதியில் அமைந்த பிடாரி கோயில்களிலும் காணப்படுகிறது. சிதைந்த உருவங்களுக்காகப் பிற்காலச் சிற்பங்கள் வைப்பது மரபு. இங்கு கல் வைத்து வழிபடப்படுவது குறிப்பிடத் தக்கதாகும்.

தகவல் : முனைவர். **பர. ஷீலா**
வரலாற்றுத் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

# 2 இந்து - முஸ்லீம் ஒற்றுமை சொல்லும் கல்வெட்டு

**நா. இரவிரங்கசுவாமி**
முன்னாள் மாணவர், தொல்லியல் துறை

நவக்கிரகத் தலங்களில் இராகு பகவானுக்குரிய தலமாகக் கருதப்படுவது திருநாகேஸ்வரமாகும். கும்பகோணத்திற்கு அருகில் உள்ளது திருநாகேஸ்வரம்.

திருநாகேஸ்வரத்தில் உள்ள சிவன் கோயிலான நாகநாத சுவாமி கோயிலில் 'இராகு பகவான்' தம் இரு மனைவிகளுடன் மங்களஇராகுவாக வீற்றிருந்து அருள்புரிகிறார். இந்த நாகநாத சுவாமி கோயிலின் உட்பகுதியில் வடகிழக்கு மூலையில் 'கிரிகுஜாம்பாள்' (குன்று மாமுலையம்மன்) சன்னதி உள்ளது. குன்று மாமுலையம்மன் சன்னதியின் நேரெதிரில் இந்து, முஸ்லீம் மக்கள் ஒருங்கிணைந்த வழிபாட்டுக்கு வகை செய்த கல்வெட்டு உள்ளது.

பலகைத்தூண் போன்ற கல்லில் கல்வெட்டு பொறிக்கப்பட்டு ஊன்றி வைக்கப்பட்டுள்ளது. கல்வெட்டின் மேல் புறத்தின் வலது பக்கம் சூரியன் வரையப்பட்டுள்ளது. இடதுபக்கம் சூலம் வரையப் பட்டுள்ளது. கல்வெட்டின் கீழ் இடதுபுறத்தில் நாக சிற்பம் செதுக்கப் பட்டுள்ளது.

நாகநாதசுவாமி கோயிலில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு முதல் கல்வெட்டுகள் உள்ளன. அனைத்துக் கல்வெட்டுகளுமே அந்தந்த கால வரலாற்றை நமக்கு பறைசாற்றுகின்றன. அந்தவகையில் இந்தக் கல்வெட்டும் நமக்கு புதிய செய்தியை தந்து நிற்கிறது. கி.பி. 1783 (சகம் 1705)-ல் பொறிக்கப்பட்ட இந்தக் கல்வெட்டு 39 வரிகளைக் கொண்டுள்ளது.

இக்கல்வெட்டில் கூறப்படும் செய்திகளாவன: திருநாகேஸ் வரத்தின் தெற்கு எல்லைப் பகுதியான உப்பிலியப்பன் கோயில் முதல், வடக்குப் பகுதியில் உள்ள ராவுத்தர் கடை வரை உள்ள எல்லாக் கடைகளும், மற்றும் சன்னாபுரத்தில் உள்ள கடைகளும், கடை ஒன்றுக்கு, நாள் ஒன்றுக்கு அரைக் ($\frac{1}{2}$) காசு வீதம் மகமை

கொடுத்து விளக்கெரிக்க வேண்டும் என்பதாகும். மொத்தக் கடைகளில் இரண்டு கடைகளின் காசு பள்ளிவாசலுக்கு ஒதுக்கப் பட்டுள்ளது.

கடைகளில் அரைக் காசு வரிவசூல் செய்து திருவிளக்கு ஏற்றும் கைங்கர்யம் தடைபட்டுவிடாமல் கண்காணிக்கவேண்டும். மேலும் திருவிளக்கேற்றும் நிகழ்ச்சிக்கு வருபவர்களை முன்கூட்டியே கணக்கெடுத்து அவர்களுக்கு மரியாதை நிமித்தம் செய்ய வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த வழிபாட்டுச் செயலுக்கு கடைக்காரர்கள் அனைவரும் சம்மதித்திருக்கின்றனர். மேலும் இச்செயலுக்கு எவரேனும் (விகாதம்) கெடுதல் செய்தல், தடுத்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டால் அவர்களுக்கு எச்சரிக்கையும் விடப்பட்டிருக்கிறது.

அதாவது, இந்துக்கள் விகாதம் நினைத்தால் கங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்ற தோஷத்திற்கு ஆளாவார்கள் என்றும், ராவுத்தர்கள் விகாதம் நினைத்தால் மக்கா நகரில் செய்யக்கூடாததை செய்த தோஷத்திற்கு ஆளாவார்கள் என்றும் அச்சுறுத்தப்பட்டுள்ளது.

வேற்றுமையில் ஒற்றுமை காணும் இந்தியத் திருநாட்டில் தற்போது சாதி, மதம், மொழி, இனம் என்ற பாகுபாடுகளால் அவ்வப்போது வன்முறைகள் அரங்கேறி வருகின்றன. ஆனால் நம் முன்னோர்கள் வழிபாட்டில் கூட ஒற்றுமையைக் கடைபிடித்திருக்கின்றனர் என்பதற்கு இக்கல்வெட்டுச் சான்றாகிறது.

கி.பி. 1783-ல் இருந்த வழிபாட்டு ஒற்றுமையைப் போலவே இன்றும் முஸ்லீம் மக்கள் இக்கோயிலில் வழிபட்டு, விளக்கேற்றி வருகின்றனர் என்பதை கள ஆய்வின் போது காணமுடிந்தது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

**திருநாகேஸ்வரம் கல்வெட்டு**

சூரியன் சூலம்

1. உ ஸ்வஸ்திஸ்ரீ
2. சாலிவாகன சகா
3. த்தம் சூளாறு சு
4. வியாத்தம்
5. சாஅம்ச யினிமேல் செல்ல
6. ா நின்ட குரோதி ஸ்ரு தையி

7. ஸ்ரீ திருனாகீசுரம் னாகலிங்க
8. சுவாமியார் குண்டு முலை
9. அம்மனுக்கு உள்ளூர் கடைக்காரர் அநி
10. வரும் மகமைப் பட்டையம் செ
11. யிது குடுத்தபடி பட்டையமாவது
12. நிதம் திருவிளக்கு பாத்துவர உப்
13. பிலியப்பன் கோவில் கடை முதல்
14. வடக்குக் கடை ராவுத்தர் கடை வ
15. ரக்கும் கடைக்கு நிதம் அரைக்கா
16. சு வீதம் அவரவர் கடைத் தெருவி
17. ல் மாதம் ஒருத்தர் முறையா தன்
18. டி எல்லாக் காசும் ஒருத்தர் வச
19. மாயி குடுத்து திருவிளக்குத் தாட்சி
20. வராமல் பாத்து வரயிருக்கிர
21. பேர் விசாரிச்சு பரிபாலனம் ப
22. ண்ண வேண்டியது சன்னாபுரம்
23. முதல் கடைக்காசு வடக்குக் க
24. டைக்கார வாங்கிறது ராவுத்தர்
25. பள்ளி வாசலுக்கு ரெண்டு கடெ ம
26. ானியம் யிந்தப்படி அனவரும் ச
27. ம்மதிச்சோம் யிதுக்கு விகாதம்
28. நினைச்சால் கெங்கை கரையில்
29. காராம் பசுவைக் கொண்
30. ண தோழம் வரும் ராவு
31. த்தர்மாரிலே
32. ல விகாதம்
33. நினைச்சா
34. ல் மக்கா
35. விலே செ
36. ய்யாது
37. செயித
38. தோழம்
39. வரும்

# 3 தலைமாறு - பரிவர்த்தனை

**இரா. சிவானந்தம்**
கல்வெட்டாய்வாளர், தொல்லியல் துறை

பரிவர்த்தனை மற்றும் தலைமாறு ஆகியவை பண்டமாற்று முறைக்கு ஒப்பானவை. ஒரு பொருளைக் கொடுத்து அதற்கு ஈடாக இன்னொரு பொருளைப் பெறுவது பண்டமாற்று முறையாகும். சங்க கால மக்களின் அன்றாடத் தேவைகளான அரிசி, பருப்பு, உப்பு, பால், தயிர், மீன், இறைச்சி ஆகிய பொருட்கள் பண்டமாற்று முறையிலேயே மிகுதியாகப் பெறப்பட்டன.

பெரிய நகரங்களிலும் பட்டினங்களிலும், வாழ்ந்த மக்களிடையே காசு கொடுத்துப் பொருட்கள் வாங்கும் முறை இருந்த போதிலும் சிற்றூர்களிலும் கிராமங்களிலும் பொதுவாகப் பண்ட மாற்று முறையே வழக்கத்திலிருந்தது. இது பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் மிகுதியாகக் கிடைக்கின்றன. இப்பண்ட மாற்று முறையை பற்றி சுருக்கமாகக் கீழே காண்போம்.

**பால்**

ஆடு, மாடுகளை மேய்க்கும் இடையர்கள் பாலைக் கொடுத்து அதற்கு ஈடாக தானியத்தை மாற்றிக் கொண்டதை "பாலோடு வந்து கூழோடு பெயரும் யாடுடை இடையன்" என்ற குறுந்தொகை வரிகளால் அறியலாம்.[1] இதிலுள்ள கூழ் என்னும் சொல் தானியத்தைக் குறிக்கின்றது.[2]

**நெல்**

மீனுக்கு மாற்றாகவும், உப்புக்கு மாற்றாகவும் நெல் பெறப் பட்டது. இதனை

"பசு மீன் நொடுத்த வெண்ணெல்" (அகம் 340:14)

"மீன் நொடுத்து நெல் குவைஇ
மிசை அம்பியின் மனைமறுக்குந்து" (புறம் 343:1-2)

"நெல்லும் உப்பும் நேரே ஊரீர் கொள்ளீரோ" (அகம் 390)

"நெல்லின் நேரே வெண்கல் உப்பு" (அகம் 140)

"உப்பை மாறி வெண்ணெல் தரீஇய" (குறுந்தொகை 269:5)

"உமணர் தந்த உப்புநொடை நெல்" (நற்றிணை 254:6)

போன்ற சங்க இலக்கியப் பாடல் வரிகளால் விளக்கலாம். மேலும் பொருள் மதிப்பில் உப்பும் நெல்லும் இணையானவை என்றும் இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

**உப்பு**

'தந்நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி' என்ற நற்றிணை வரியினால் நெல்லைக் கொடுத்து உப்பை மாற்றிக் கொண்டதை அறியமுடிகிறது.[3]

**தேன் மற்றும் கிழங்கு**

வேடர்கள் தேனையும் கிழங்கையும் கொடுத்து வறுத்த மீனும் மதுவும் வாங்கி உண்டனர். இதனைக் கீழ்க்காணும் வரிகளால் அறியலாம்.

''தேனெய்யொடு கிழங்கு மாறியோர்
மீனெய்யொடு நறவு மறுகவும்''

(பொரு. ஆற்றுப்படை 214:11)

இதனில் 'மாறியோர்' என்ற சொல் வருவது நோக்கத்தக்கதாகும்.

**கரும்பு மற்றும் அவல்**

''தீங்கரும்பொடு அவல் வகித்தோர் மான் குறையொடு மது மறுகவும்'' (பொரு. ஆற்று 216:10) என்ற வரிகளால் கரும்பு மற்றும் அவலைக் கொடுத்து வறுத்த மான் இறைச்சியையும் மதுவையும் உண்டனர் எனத் தெரிகிறது.[4]

**யானைத் தந்தம்**

யானையின் தந்தத்தை மதுபானக் கடையில் கொடுத்து நெல்லினால் தயாரிக்கப்பட்ட மதுவைக் குடித்துள்ளனர். இதனை

''அண்ணல் யானை வெண்கோடு கொண்டு
நறவுநொடை நெல்லின் நாண்மகிழ் அயரும்'' (அகம் 61:10)

என்ற பாடல் வரியால் விளக்கலாம்.[5]

**கள்ளுக்கு விலையாக முத்துச்சிப்பி**

''பன்மீன் கொள்பவர் முகந்த இப்பி நாரரி நறவின் மகிழ் நொடைக் கூட்டும்'' என்பதால் அறியலாம்.[6]

இவ்வெடுத்துக்காட்டுகள் மூலம் பொருளுக்கு மறுபொருள் மாற்றிக்கொள்ளும் முறை சங்க காலத்தில் பரவலாக இருந்தது என்பது தெளிவாகிறது.

**மாறு - விலைமாறு**

ஆய் மகளிர் தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுத்து நெய் காய்ச்சினர். தயிரையும் மோரையும் பண்டமாற்று முறையில் தானியத்தைப் பெற்று சுற்றத்தாருடன் உணவு சமைத்து உண்டதைப் பெரும்பாணாற்றுப்படை

''உறையமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து
புகர்வாய் குழிசி பூஞ்ச மட்டு இரீஇ
நாள் மோர் மாறும் நன்மா மேனி..''

எனக் கூறுகிறது. இவ்வரிகளில் மாறும் என்ற சொல் பண்டமாற்றுதலைக் குறிக்கிறது. இதுபோலவே பாரதியும் தன் பாடலில்

''கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்''

என்று குறிப்பிடுகிறார்.

''கதழ்கோல் உமணர் காதல் மடமகள்
சில்கோல் எல்வளை தெளிப்ப வீசி
நெல்லின் நேரே வெண்கல் உப்பினைச்
சேரி விலைமாறு கூறலின்'' (அகம் 140:5-8)

இப்பாடலில் குறிப்பிட்டுள்ள விலைமாறு என்பது பொருளின் மதிப்புக்கு மாற்றாகப் பண்டமாற்றம் என்ற பொருளைக் குறிப்பது ஒப்புநோக்கத்தக்கது. இதன் மூலம் விலை என்பது பொருளின் மதிப்பைக் குறிக்கிறது. இம்மதிப்பு அக்காலக்கட்டத்திலிருந்த காசுகளின் அடிப்படையிலே மதிப்பிடப்பட்டுள்ளது. இதே அகநானூற்றுப் பாடல்களில் ''பளிங்கின் துணைக்காசு''[7] மற்றும் ''பொலஞ் செய் காசு''[8] என்ற குறிப்புகளால் காசு புழக்கத்திலிருந்ததையும் பண்டமாற்று முறை அல்லாமல் காசு கொடுத்து வாங்கும் பழக்கமும் இருந்துள்ளது என்பதையும் இக்காசுகளின் மதிப்பிற்கேற்ப பண்டமாற்றம் நடந்துள்ளது என்பதையும் எளிதில் விளங்கிக் கொள்ளலாம்.

**பரிவர்த்தனை - பரிவட்டணை**

ஒன்றைக் கொடுத்து மற்றொன்றைப் பெறுவது பண்டமாற்று முறையைப் போல ஒரு குறிப்பிட்ட அளவுப் பொருள் அல்லது நிலத்தினைக் கொடுத்து அதற்கு ஈடாக மற்றொரு பொருள் அல்லது நிலத்தினை மாற்றிக் கொள்ளல் பரிவர்த்தனை எனப்படும்.

''பண்ணல் பரிவட்டணை யாராய்தல் தைவரல்
கண்ணிய செலவு விளையட்டுக் கையும்
நண்ணிய குறும்போக் கென்று நாட்டிய
எண் வகையாள் இசையாழ் இவ்
பண் வகையாற் பரிவு தீர்ந்து'' (சிலம்பு : 7: 5-9)

இச்சிலப்பதிகார வரிகளில் ''பரிவட்டணை'' என்ற சொல் நரம்பை அகவிரலாலும் புறவிரலாலும் கரணஞ்செய்து தடவிப் பார்த்தல் என்பதை (அகவிரலாலும் புறவிரலாலும் மாற்றி மாற்றிக் கரணஞ்செய்தலை) குறிக்கிறது. வட்டணை என்பதற்குத் தாளம், வட்டம் என்ற பொருள்கள் என்றாலும் இங்கு வட்டம் என்று பொருள் கொள்ளலாம். ஆதலால் வட்டம் என்பது முழுவதுமாக மாறுதல் எனலாம். இவ்விடத்தில் பரிவட்டணை என்பது முழுவதுமாக மாற்றிக் கொள்ளுதல் எனலாம்.

பரி என்பது மிகுதிப்பொருள் குறிக்கும் ஓர் இடைச்சொல்[9] இதனை 'பரி புலம்பினரென' என்ற சிலம்பின் குறிப்பால் உணரலாம்.[10] பரிசோதனை, பரிணாமம், பரிமாற்று, பரித்தியாகம், பரிநிர்வாணம், பரிபூரணன், பரிபூரணி, பரித்தியாகி ஆகிய வார்த்தைகளில் பரி என்பது மிகுதிப்பொருளைக் குறிக்கின்றது என்பதை விளங்கலாம். பரிவட்டணை என்ற சொல் பரிவத்தனை என்றும் பின் பரிவர்த்தனை எனத் திரிந்துள்ளது எனக் கருதலாம்.

வட்டணை என்பது வத்தனை என திரிந்துள்ளதை 'நம்மிட வத்தினை குமாரர் வத்தினை நம்மிட அதிகாரி வத்தினை ... உள்பட' என்ற கல்வெட்டுக் குறிப்பால்[11] வத்தினை என்பது உரிமைப்பேறு எனப் பொருள் கொள்ள முடிகிறது. எனவே பரிவத்தனைக்கு உரிமை மாற்றல், மாற்றுதல், பண்டமாறு, பண்ட மாற்றம் எனப் பொருள்கள் கொள்ளலாம். மேலும் வடமொழியில் பரிவர்த்த, பரிவத்தக என்பதற்கு வட்டமாதல், சுற்று, திரும்புதல், சக்கரம் எனப் பொருள் கூறப்பட்டுள்ளது.[12] வர்த்த, வத்தக என்ற சொற்களின் வேர்ச்சொல் 'விருத்' என்பதாகும்.[13] விருத் என்பதற்கு மாறுதல் என்ற பொருள் சுட்டுகிறது.[14] இவைகளின் மூலம் வட்டணை என்பது வத்தனை, வர்த்தனையாக திரிந்துள்ளது எனக் கொள்ளலாம்.

இதுபோன்று மேருமந்திர புராணத்தில் (9-ஆம் நூற்றாண்டு) ''ஐம்பரிவட்டணை யாத்தில் வாமுயர்க்கு'' பரிவட்டணை என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.[15] தண்டியலங்காரத்தில் (12-ஆம்

நூற்றாண்டு) பரிவருத்தனையணி என்பது ஒரு பொருள் ஒன்றைக் கொன்று கொடுத்து ஒன்று கொண்டனவாகச் சொல்வது என்று கூறுகிறது.[16] மேலும் இரு நிலத்தவர் . . . . . கொள்ளும் பரிவர்த்தனம் போல் என்ற 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சேதுபுராண குறிப்பாலும் உறுதிப்படுத்தலாம்.[17]

**கல்வெட்டுகளில் பரிவர்த்தனை**

கல்வெட்டுகளில் பரிவர்த்தனை என்ற சொல் பரிவத்தனை, பரிவற்தனை, பரிவர்த்தனை எனக் குறிக்கப்பட்டுள்ளது. மேலும் பரிவர்த்தனை ஆவணங்கள் விசத்தலைபரிவர்த்தனை பிரமாணம்,[18] அறுதிபரிவர்த்தனையோலை,[19] பரிவர்த்தனை விவஸ்தை,[20] பரிவர்த்தனை இசைவுத் தீட்டு[21] என்று அழைக்கப்பட்டுள்ளன. விசத்தலைபரிவர்த்தனை என்பது மாசின்மையற்ற, வில்லங்கம் இல்லாத சுத்தமான பரிவர்த்தனை ஆகும். அறுதிபரிவர்த்தனை என்பது முடிவான அல்லது தீர்வான பரிவர்த்தனை எனலாம்.

நன்னிலம் வட்டம் பருத்தியூர்க் கல்வெட்டில் விக்கிரம சோழ புரத்து நகரத்தார் 'மா' காணி நிலம் நகரத்துக்கு உடலாகப் பெற்றுக் கொண்டு பரிவர்த்தனையாக மற்றொரு நிலம் மூன்று மா நிலம் இறையிலியாக அளித்துள்ளனர்.[22]

திருப்பனையூர் விக்கிரமபாண்டியனின் ஐந்தாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டில் திருவீதி செய்வதற்காகப் பெற்றுக் கொண்ட நிலத்திற்கு மாற்றாக முப்பது மனைக்குழி பரிவர்த்தனையாகக் கொடுத்துள்ளனர்.[23]

திருப்பாலைத்தறை உத்தம சோழன் 9-ஆவது ஆட்சி யாண்டுக் (கி.பி. 979) கல்வெட்டில்[24] புதிதாகத் திருமடைவிளாகம் அமைக்க மூர்த்தி மானவீரன் என்பவனிடமிருந்து 4 மா நிலம் அறுதிபரிவர்த்தனை செய்து இதற்குத் தலைமாறாக மடைவிளாக மாகக் குடியிருக்கிற நிலம் அரை மா நிலம் கொடுக்கப்பட்டு மேலும் இந்த அரை மாநிலமும் இவனால் எழுப்பிவைக்கப்பட்ட திருப் பாலைத்துறைச் சூரிய தேவர்க்குத் திருவமுதுக்கும் கறிஅமுதுக்கும், இரண்டு திருவிளக்கு எரிப்பதற்கும் பரிவர்த்தனை மூலம் கொடுக்கப் பட்டச் செய்தியையும் அறிந்து கொள்ளமுடிகிறது.

நலன்திகழ் நாராயண ஜீயர் காவேரியில் வெள்ளம் வந்த போது திருவரங்கத்துக்கு மிகப்பெரிய சேதம் ஏற்பட்டதால் ஆனை காத்தான் கரையில் யந்தரஸ்தாபநம் செய்து சாஸ்தாவையும்

பிரதிஷ்டை செய்து வடகரையைச் சீர்செய்து அகலப்படுத்தி நாணலும் நடப்பட்டது. இதனால் தென்கரையில் இருந்த சிந்தாமணி கிராமம் பாதிப்புக்குள்ளாகும் என்பதால் சிந்தாமணி கிராமத்திற்கு கொளகுட்டைக் கிராமம் பரிவர்த்தனையாகக் கொடுக்கப்பட்டது. சிந்தாமணி கிராம மக்கள் மன்னனிடம் முறையிட நலன்திகழ் நாராயணஜீயரை அழைத்து இப்படி பிராமண ஹிம்சை செய்யலாமா என்று கேட்டார். அதற்கு ஜீயர், 'நிமித்த கிருதம் பாபமடவி தர்ம்மாய கல்பதே' என்று பகவத் கீதையிலே சொன்னது கண்டு செய்ததாகவும் எனக்கூற இதைக் கேட்ட சோழ மன்னன் சந்தோஷப்பட்டு திருவரங்கத்திற்கு இவ்விடத்தை தாரை வார்த்துக் கொடுத்துள்ளார் என இராமானுஜ சதாசிவதேவரிடம் (கி.பி. 1546) ஸ்ரீசைல பூர்ணசார்யர் முறையிட முன்னர் அளித்தது தொடர அரசர் உறுதியளித்துள்ளார்.[25]

## வீட்டு மனைக்கு ஈடாகத் தோட்ட நிலம்

புதுக்கோட்டை மாவட்டம் நீர்ப்பழனி வளர்மதீஸ்வரர் கோயிலில் உள்ள சுந்தரபாண்டியனின் கல்வெட்டில் ''சன்னதித் தெருவுக்குக் கீழகெணைய இவர்கள் மனையில் ௰௬ (16) அடிக் கோலால் கொண்ட குழி ௰௬ (16)க்கு விலை நிச்சயித்த காசு ௪௲௮௱ (4800)க்கு செலவாக இன்னாயநார் தேவதானந் திருப்பாழ்வார் தோட்டத்தில் கிழருகுருவ இக்கோலால் நாங்கள் விற்ற குழி ௪௰௫ (45) பண்டாரத்திலொடுக்கினக் காசு ௱௫௰(150) ...'' என்ற கல்வெட்டு[26] வரிகளால் இவ்வூரார் இக்கோயிலுக்கு சன்னதி தெரு அமைப்பதற்காக இதே ஊரைச்சேர்ந்த மொண்ணை வரையாதான் மற்றும் மொண்ணை கணவதி ஆகியோரிடம் உரிய குடியிருப்பு மனையில் 16 அடிக்கோலால் அளக்கப்பட்ட 16 குழிகளைப் பெற்றுக்கொண்டனர். இந்த 16 குழியின் மதிப்பு 4800 காசுகள் என மதிப்பிட்டு இதற்கு பரிவர்த்தனையாக இக்கோயிலின் தேவதான தோட்டத்திலிருந்து 45 குழி நிலமும் கோயில் கருவூலத்தி லிருந்து 150 காசுகளும் கொடுத்துள்ளனர்.

4800 காசுகள் மதிப்புடைய 16 குழி மனை நிலத்திற்கு ஈடாக 45 குழி தோட்ட நிலமும் 150 காசுகளும் பரிவர்த்தனையாக வழங்கப்பட்டுள்ளது. 16 குழியின் விலை (மனை நிலம்) 4800 காசுகள். எனவே 1 குழி (மனை நிலம்) விலை (4800/16) 300 காசுகள் ஆகிறது. மொத்த மதிப்புக் காசில் தோட்டம் போக மீதம் கையில் பெற்றுக்கொண்ட காசு 150 காசுகள் ஆகும். எனவே 45 குழி

தோட்டத்தின் விலை 4650. இதன்படி ஒரு குழி தோட்ட நிலத்தின் விலை (4800-150=4650/45) 133.33 காசுகள் எனக் கணக்கிடலாம்.

தோட்ட நிலத்தின் விலையை விட மனை நிலம் இரண்டேகால் மடங்கு அதிகம் எனத் தெளிவாகிறது. இதன் மூலம் நில அளவிற்கு ஈடாக மற்றொரு நிலம் வழங்காமல் மனை நிலத்தின் மதிப்பை நிர்ணயித்து அம்மதிப்பிற்கு ஈடாக தோட்ட நிலமும் காசுகளும் பரிவர்த்தனையால் வழங்கியிருப்பது சிறப்பம்சமாகும்.

**சகோதரருக்குள் நிலப் பரிவர்த்தனை**

"நானும் தம்பிமாரும் பரிவர்த்தனைப் பண்ணின கொடித் தோட்டத்தில் .... தெற்கடைய மனைக்குழி இருபத்தேழும் ஆக குழி அறுபத்தொன்பதும்" என்ற முதலாம் குலோத்துங்கன் 42-ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1112) கல்வெட்டு வரிகளால் பொதுச்செயல் களுக்கு மட்டுமல்லாமல் உறவினர்களுக்குள்ளும் பரிவர்த்தனைகள் செய்யப்பட்டுள்ளன என்றறிகிறோம்.[27] "குழி பன்னிரண்டுக்குக் காசு ஒன்றாக எம்மிலிசைந்த விலைபொருள் அன்றாடு நற்காசு ரு ஊ இக்காசு அஞ்சேமுக்காலும்" எனும் இக்கல்வெட்டுக் குறிப்பால் நிலம் விற்றுக் கொடுத்ததற்காக 12 குழிக்கு ஒரு காசு வீதம் 69 குழிக்குமாக ஐந்தேமுக்கால் காசுகள் பெற்றுக்கொண்ட செய்தியை யும் அறியலாம்.

**தலைமாறு**

தலை என்ற சொல்லுக்கு ஆகாயம், ஆதி, இடம், தலை, தலைமை, பெருமை என பல பொருள்கள் கூறப்பட்டுள்ளன.[28] தலைமாறு என்ற சொல்லில் உள்ள "தலை" என்பதற்கு இடம் என்ற பொருளும் உள்ளது. மேலும் இடம் என்பது நிலம், குடியிருப்பு நிலம், மனை நிலம் என்பவைகளையும் குறிக்கும்.

தலைமாறு என்பது ஒரு நிலத்திற்கு ஈடாக மற்றொரு நிலத்தை மாற்றிக் கொள்ளல். இந்த பரிமாற்றம் பரிவர்த்தனை என்ற சொல்லால் அழைக்கப்பட்டுள்ளது. இதனை "சிறியன் புல்லன் அல்லூர் தலை வாயரிடை விலை கொண்ட நிலம் அல்லூற் ஊராற்க்குக் குடுத்து அதின் தலைமாறு ஊராரிடைப் பரிவர்த்தனை செய்து கொண்டு இத்தேவற்கு தேவதானமாகச் செய்து குடுத்த நிலத்துக்கு" என்ற கல்வெட்டுத் தொடரால் தலைமாறு செய்து

ஊராரிடைப் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளதை அறிகிறோம்.[29] இக்குறிப்பால் தலைமாறு என்பது நிலப்பரிமாற்றம் என்ற பொருளில் சுட்டப்பட்டுள்ளதை நன்கு உணரலாம்.

திருவானைக்காக் கோயில் தேவதான நிலத்திற்கும் திருவரங்கக் கோயில் தேவதான நிலங்களுக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சினையில் நில எல்லைகள் வரையறை செய்யப்பட்டன. இப்பிரச்சினை காவிரியாற்றில் வெள்ளம் ஏற்பட்டு அழிவு செய்ததால் ஏற்பட்டது. இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு செய்யப்பட்டதை, ''திருச்சிராப்பள்ளியுடையார் தேவதானம் ஆலங்குடியில்விடவேண்டும் நிலந் திருவரங்கத்துக்கு உடலாக விட்டு விட்ட நிலத்துக்குத் தலைமாறு கொட திட்டையில் அழகிய மணவாளப் பெருமாள் திருநாமத்துக்காணியிலே பற்றிப் பரிவற்தனை பண்ணிக்க கடவார்களாகவும்'' என்ற கல்வெட்டுக் குறிப்பால் இரு கோயில் தேவதான நிலங்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.[30]

''ஸ்ரீகயிலாசமுடையார் திருமடைவிளாகத்து திருஞாநசம்பந்த குகைக்கு தலைமாறு விட்ட நிலத்துக்கு கிழக்கடைய'' என்ற கி.பி. 1236-37-ஆம் ஆண்டுக் கல்வெட்டு[31] வரியினால் சமயக்குரவர்களில் ஒருவரான திருஞானசம்பந்தர் பெயரில் மடம் கட்டுவதற்காகப் பெறப்பட்ட நிலத்திற்கு மாற்றாக மற்றொரு நிலம் அளிக்கப்பட்டுள்ளமை அறியப்படுகிறது.

மதுரை மாவட்டம் குருவித்துறை, ஸ்ரீவல்லவ மன்னனின் 16-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் வாய்க்காலுக்கு மேல் நிலம் உயர்த்திப் பயிர் செய்ததால் நீர் நின்று போய்ப் பயிர் செய்ய இயலவில்லை. ஆகையால் இதற்கு மாற்றாக நிலம் வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்று இவரது 11-ஆம் ஆட்சியாண்டிலும் ஏற்பட்டுள்ளது. இதனை ''பதினொன்றாவது முதல் மாறித் திறப்பாக்கி இந்நிலத்துக்குத் தலைமாறு தென்கரையில் ஆழ்வார் தேவதானமாகத் திறப்பாய் இறுத்து வருகிற நிலத்திலே ஐஞ்செய் ஒருமாவரை அனரக்காணியும்'' என்ற கல்வெட்டு வாசகத்தால் அறியலாம்.[32]

திருநள்ளாறு தர்ப்பாரண்யேஸ்வரர் கோயிலில் உள்ள இரண்டாம் குலோத்துங்கனின் 3-ஆவது ஆட்சியாண்டுக் (கி.பி. 1136) கல்வெட்டில்[33] ''திருநள்ளாறுடையாற்க்கு முந்பு தேவதானமாய் வருகிற நிலம் திருப்படிமாற்றுக்கு போதாதென்றும்

இக்காணியும் .... இத்தேவான இறையிலியாக இத்தலைமாறு வேண்டும் நிலம் உட்பட'' என்ற குறிப்பால் இறைவனுக்குத் தினமும் செய்ய வேண்டிய நிவேதனங்களுக்கு ஏற்கனவே வழங்கிய தேவதான நிலம் போதாமையில் மேலும் தேவையான நிலத்திற்கு மாற்றாக மாற்று நிலம் வழங்கப்பட்டுள்ளது.

''இநிலம் 4 மாவும் அறுதிபரிவர்த்தனையைக் கொண்டு இதற்கு தலைமாறாக மூர்த்தி மானவீரனுக்கு அறுதிபரிவர்த்தனை யால் குடுத்த நிலமாவது ஸ்ரீகாமுவதிக்கு மேர்க்கு ஆதிச்ச வாய்க்காலுக்கு வடக்கு கிழக்கு நின்று நாலாங்கண்ணாற்று தென்மா மடைவிளாகமாய் குடியிருக்கிற நிலம் அரைமாவும் அறுதி பரிவர்த்தனையால் குடுத்து''[34] என்ற கல்வெட்டு வரிகளால் 4 மா நிலத்திற்கு மாற்றாக மடைவிளாகமாய்க் குடியிருக்கிற நிலம் அரை மா நிலம் அளித்துள்ளனர் என அறிகின்றோம். 4 மா நிலத்திற்கு ஈடாக அரை மா குடியிருப்பு நிலம் பரிவர்த்தனை செய்யப்பட்டதை அறுதி பரிவர்த்தனை (தீர்வான பரிவர்த்தனை) என்று குறிப்பிட்டுள்ளனர்.

ஒரு பொருளைக் கொடுத்து அதற்கு ஈடாக மற்றொரு பொருளைப் பெறுவது பண்டமாற்றம் எனப்படும். பரிவர்த்தனை என்பது நிலத்திற்கு மாற்றாக நிலத்தைப் பெற்றதையும், மனை நிலம் அல்லது குடியிருப்பு நிலத்திற்கு மாற்றாக தோட்ட நிலம் அல்லது விளைநிலங்கள் பெறப்பட்டமையாகும். நிலத்திற்கு மாற்றாகக் காசுகள் பெறப்பட்டச் செய்திகளைப் பற்றியும் முன்னர் கண்டோம். ஆனால் தலைமாறு என்ற சொல் கல்வெட்டுகளில் நிலத்திற்கு மாற்றாக நிலம் பரிவர்த்தனை செய்கின்ற போது மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. கல்வெட்டுகளில் தலைமாறு மற்றும் பரிவர்த்தனையும் என்ற சொற்கள் ஒரே இடத்தில் கையாளப்பட்டாலும் தலைமாறு என்பது நிலம் மற்றும் இடத்தினை மாற்றிக் கொள்ளுதல் குறித்து மட்டுமே காணப்படுகிறது.

பண்டமாற்றம் செய்யும்போது பொருளின் மதிப்பிற்கேற்ப பரிமாற்றம் செய்ததை 'விலைமாறு' என்ற குறிப்பு உள்ளது. இதுபோன்ற செய்திகளை மேலும் தொகுக்கும் போது பண்டையப் பொருளாதாரக் கூறுகள் நன்கு விளக்கம் பெறும் என்று கூறலாம்.

அடிக்குறிப்புகள் :

1. குறுந்தொகை 221 : 3
2. Tamil Lexicon
3. நற்றிணை. 183
4. பொரு. ஆற்று 216 : 10
5. அகநானூறு 61 : 10
6. அகநானூறு 296 : 8-9
7. அகநானூறு 315 : 12
8. அகநானூறு 363 : 8
9. Tamil Lexicon
10. சிலம்பு : 10,226
11. தெ.இ. கல். தொகுதி. 4/272
12. Monier Williams, "Sanskrit-English Dictionary"
13. Ibid
14. Ibid
15. மேருமந்திரபுராணம்
16. தண்டியலங்காரம்
17. சேதுபுராணம் திருநா. 79
18. புதுக்கோட்டை கல்வெட்டுகள். 326
19. தெ.இ.கல். தொகுதி. 19/222
20. பாபநாசம் வட்டக் கல்வெட்டுகள் தொகுதி. 23,2/1995 பக். 139
21. மேலது
22. நன்னிலம் வட்டக் கல்வெட்டுகள் தொகுதி.3:399/1978
23. நன்னிலம் வட்டக் கல்வெட்டுகள் தொகுதி. 2, 198/1978
24. தெ.இ.கல்.தொகுதி : 19/222
25. தெ.இ.கல்.தொகுதி : 24/460
26. புதுக்கோட்டை கல்வெட்டுகள். 326/5
27. நன்னிலம் வட்டக் கல்வெட்டுகள் தொகுதி.2, 198/1978
28. Tamil Lexicon
29. தெ.இ.கல்.தொகுதி : 8/692
30. தெ.இ.கல்.தொகுதி : 24/142
31. தெ.இ.கல். தொகுதி : 17/563
32. தெ.இ.கல். தொகுதி : 14/236
33. வேங்கடேசன், ந. "கல்வெட்டுகளில் காரைக்கால் பகுதிகள்" வில்லியனூர் : திருமுடிப்பதிப்பகம், 2000, பக். 180
34. தெ.இ.கல். தொகுதி : 19/222

4

# வடசிறுவளூர்க் கல்வெட்டுகள்

ப. பூபாலன்
தொல்லியல் துறை, சென்னை

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில் உள்ள சிற்றூர் வடசிறுவளூர். இவ்வூரில் உள்ள திருக்கோடீஸ்வரர் கோயிலில் இரண்டு கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. ஒரு கல்வெட்டு அர்த்தமண்டப வடபுற ஜகதிப்படையில் உள்ளது. மற்றொரு கல்வெட்டு கோயில் முன்பாகத் தளத்தில் பதிக்கப் பட்டுள்ள பலகைக் கல்லில் உள்ளது.

தரையில் பதிக்கப்பட்டுள்ள கல்வெட்டு கி.பி. 14 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இக்கல்வெட்டு இவ்வூர் ஏரியிலிருந்து கொண்டு வரப்பட்டதாகக் கருதலாம். சற்று சிதைந்துள்ள அக்கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு:

1. ஸ்வஸ்திஸ்ரீ பிலவங்க
2. வரிஷம் வைகாச மாத
3. த்து ஒரு நாள் உ தென்
4. ன . ருயழுதேருஞ் செத்தா
5. மரைக் கண்ணன் கன்
6. னல் வயல் மல்லைக் க
7. லிங்கன் தன்னருளாற்றெ
8. [ன்] மருஞ்சோலை சிறுவை
9. யேரி கநமைத்தான் மா
10. ன பரிபாலன் மதகு உ
11. ஸ்ரீஹஸ்த

பாடல் வடிவில் உள்ள இக்கல்வெட்டு எழுத்தமைதியில் கி.பி. 14 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். மல்லைக் கலிங்கன் என்பவன் சிறுவை என்ற இவ்வூரில் உள்ள ஏரிக்கு மதகு

அமைத்தான் என்ற செய்தியை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. அவனது மல்லை என்ற ஊர் கரும்பு (கன்னல்) வயல்கள் நிறைந்தது என்று சிறப்பாகச் சொல்லப்படுகிறது.

இரண்டாவது கல்வெட்டு நாயக்கர் காலத்தியதாகும். பல இடங்களில் தெளிவில்லாமல் உள்ளது. பய்யப்ப நாயக்கரது மகன் கிருஷ்ணப்ப நாயக்கர் திருக்கோடீஸ்வர மகாலிங்கத்துக்குக் கொடுத்த நிலக்கொடையும் அந்நிலம் 36 பங்குகளாகப் பிரிக்கப் பட்டு 12, 12 பங்குகளாக மூன்று செலவுகளுக்கு கொடுத்த விவரமும் இக்கல்வெட்டில் உள்ளது. இந்த கிருஷ்ணப்ப நாயக்கர் விஜய நகரப் பேரரசர் சதாசிவராயரின் (கி.பி. 1542-70) கீழ் இப்பகுதியை ஆண்டுள்ளார். இக்கல்வெட்டில் குறிக்கப்படும் சாலிவாகன சகாப்தம் 1469 கி.பி. 1547 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வூரின் பெயர் உத்தமசோழ நல்லூரான சிறுவளூர் ஆகும். வடமொழியில் பிரதிநாமமான ஸமுத்திரம் என்று சொல்லப்படுவது போல் தெரிகிறது. கல்வெட்டு தெளிவாக இல்லை. நாட்டுப் பிரிவுகள் ஜெயங்கொண்ட தொண்டை மண்டலப் படைவீடு ராஜ்யத்து வெண்குன்றக்கோட்டத்து ஸிம்ஹபொருத வளநாட்டுத் தெள்ளாற்று உத்தமசோழநல்லூர் என்று குறிக்கப்பட்டுள்ளன.

சோழர் பாண்டியர் ஆட்சிக்குப் பிறகு குறுநிலத் தலைவரது கல்வெட்டாக முதல் கல்வெட்டும், விஜயநகரப் பேரரசின் கீழ் நாயக்கத் தனம் உடையவரின் கல்வெட்டாக இரண்டாவது கல்வெட்டும் உள்ளன. குறுநிலத் தலைவர்களாக அவர்கள் இருந்த போதிலும் இவ்வூர்க் கோயிலில் வழிபாடும், இவ்வூரில் நீர்பாசன வசதியும் அத்தலைவர்களால் நன்கு பேணப்பட்டன என்பது தெரிகிறது.

---

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், வடசிறுவளூர் திரு. ஆதி. கதிர்வேல் முதலியார் அவர்கள் அளித்த தகவலின்படி முதன்மை ஆணையரின் ஆணைக்கிணங்க மேற்படி கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு, வரலாற்றுக் குறிப்புகளுடன் வெளியிடப்படுகிறது.

# 5

# சங்கரன்பந்தல் - தொல்லியல் கள ஆய்வு கண்டுபிடிப்புகள்

**கோ. முத்துசாமி**
காப்பாட்சியர், தரங்கம்பாடி

### அமைவிடம்

நாகை மாவட்டம் தரங்கம்பாடி வட்டத்தில் வீரசோழன் ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது சங்கரன்பந்தல் எனும் ஊர். காவிரி ஆற்றின் கிளை நதியான வீரசோழன் ஆறு இங்கு பாய்ந்து செழிப்பூட்டுகிறது. காவிரியாற்றின் தெற்கே சுமார் 15 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. மங்கைநல்லூரிலிருந்து பொறையார் செல்லும் சாலையில் நடுவில் உள்ளது. பொறையாரிலிருந்து மேற்கே 10 கி.மீ. தொலைவிலும் மயிலாடுதுறையிலிருந்து தென்கிழக்காக 20 கி.மீ. தொலைவிலும் ''சங்கரன்பந்தல்'' எனும் இவ்வூர் அமைந்துள்ளது.

### கள ஆய்வு நோக்கம்

சங்கரன்பந்தலில் பணிபுரியும் தமிழாசிரியர் திரு. ப. கலையரசன் அவர்கள் அளித்த தகவலின் பேரில் 25.3.07 அன்று அங்கு சென்று கள ஆய்வு நடத்தப்பட்டது

முள்ளிப்பள்ளம் வாய்க்கால் எனும் வாய்க்கால் கரையில் கீழத் தெரு பகுதியில் முட்புதர்களுக்கு இடையில் சிறு திடல் பகுதி உள்ளது. முன்பு பெரிய திடலாக இருந்துள்ளது. இங்கு செங்கல் மதிலால் சூழப்பட்ட சோழர்காலப் பெருமாள் கோயில் முன்பு வழிபாட்டில் இருந்துள்ளது. தற்போது கோயில் அழிந்துவிட்டது. கோயில் இருந்த திடல் பகுதியும் மண் எடுக்கப்பட்டதால் உண்ணாழி மட்டும் எஞ்சியிருக்கிறது. ஸ்ரீதேவி - பெருமாள் - பூதேவி சிற்பங்கள் மட்டுமே திடலில் புதர்கட்கிடையே சாய்ந்து கிடந்தன. முட்புதர் அகற்றப்பட்டுச் சிலைகள் நேர் செய்து நிறுத்தி அங்கு மேலும் ஆய்வு செய்யப்பட்டன.

### பழைய கற்காலக் கைக்கோடரிகள் ஒத்த கற்கள்

பெருமாள் கோயில் சிலைகள் பூமியிலிருந்து நிமிர்த்தி கல் பீடங்களில் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அப்போது

அப்பகுதியில் புதிய கற்காலத்தைச் சேர்ந்த கைக்கோடரிகள் போன்று மூன்று கற்கள் கண்டெடுக்கப்பட்டன. விளிம்புகளும் அடிப் பகுதியும் கூர்மையாக உள்ளன. மேற்பகுதி சற்று தட்டையாக அகன்று பிடிப்புடன் உள்ளது.

இவை நாகை மாவட்டத்தில் கிடைத்திருப்பது இரண்டாவது தடவை ஆகும். இதற்கு முன்பு செம்பியன்கண்டியூரில் இரண்டு கைக்கோடரிகள் கிடைத்துள்ளன. எனவே காவிரிக்கரை ஆய்வுக்கும் தமிழர் நாகரிக வாழ்க்கைக்கும் இக்கருவிகள் கிடைத்திருப்பது மேலும் சிறப்பாகக் கருதப்படுகிறது.

எனவே சுமார் 4000 ஆண்டுகட்கு முன்பாக இப்பகுதி மக்கள் வாழ்விடமாகவும், கற்கருவிகள் வழிபாட்டுப் பொருட்களாக வும் இருந்துள்ளதும் அவை சோழர் காலத்தில் [கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டு] இங்கு பெருமாள் கோயிலில் வைத்து வழிபாட்டில் இடம் பெற்றிருக்கலாம் என்றும் ஆய்வில் உணரமுடிகிறது. இவை சேகரித்து வரப்பட்டுள்ளன.

### சோழர்காலச் செங்கற்கள்

பெருமாள் கோயில் திடலில் ஆய்வு செய்ததில் மூலவர் பீடத்தைச் சுற்றிச் செங்கற்கள் மற்றும் சுதை சேர்த்துப் பாவப் பட்டுள்ளது. அவை ஒரு அடி நீளம், அரை அடி அகலம், 2 அங்குல கனம் உடையவை. பூமிக்கு அடியிலும், மேற்பரப்பிலும் சில செங்கற்கள் கிடைத்தன. அவை குங்குமச் சிவப்பாக நேர்த்தி யாகவும் உறுதியாகவும் உள்ளன. அவற்றுள் இரண்டு செங்கற்கள் சேகரித்து வரப்பட்டன.

### சோழர் கலையில் பெருமாள்

இச்சிற்பம் 7 அடி உயரம் உடையது. கீழே தனிப் பீடம் உள்ளது. பீடத்தில் நிறுத்தி வைப்பதற்கு ஏற்றவாறு அடிப்பகுதி கூர்மையாகச் செதுக்கப்பட்டுள்ளது. தாமரைப் பீடத்தில் 4 கரங் களுடன் நேராக நின்ற நிலையில் உள்ளார். பின் வலக்கை சக்கரமும், பின் இடது கை சங்கும் ஏந்தி, முன் இடக்கை இடுப்பில் வைத்த நிலையிலும் முன் வலக்கை பின்னமாகியும் காணப் படுகின்றன. அருகில் ஸ்ரீதேவி பூதேவி சிற்பங்கள் $5\frac{1}{2}$ அடி உயரத் தில் தனித்தனி பீடத்தில் உள்ளன. முற்காலச் சோழர் கட்டிய பெருமாள் கோயில் ஏதோ காரணத்தினால் அழிந்தாலும் அங்கு வழிபாட்டில் இருந்த இந்த மூன்று சிலைகளின் கலைநயம் இன்றும் காண்போர் மனம் கவரும் வண்ணம் உள்ளன.

இன்றும் "பெருமாள் கோயிலடி" என்று இப்பகுதியின் பெயர் வருவாய் ஏடுகளில் உள்ளது. கோயில் கட்டியபோது வழிபாட்டில் இருந்த தலமரம் பட்டுப்போய்விட்டது. ஆனால் அதன் அடி வேரில் இருந்து முளைத்து வளர்ந்து வந்த வில்வ மரம் இன்றும் பழைமை மாறாமல் சிலைகட்கு பின்புறம் காட்சி தருகிறது.

**ஊரின் தொன்மை**

இவ்வூரின் கிழக்கில் ஸ்ரீஅகிலாண்டேசுவரி உடன் உறை ஸ்ரீசங்கரநாத ஈஸ்வரர் சிவன் கோயில் உள்ளது. இது வைப்புத் தலமாக உள்ளது. மேலும் பிடாரி கோயில், அய்யனார் கோயில், கண் கொடுத்த மாரியம்மன் கோயில் முதலியனவும் வழிபாட்டில் உள்ளன.

ஊரின் கிழக்கே திருவிடைக்கழி, மேற்கே நல்லாடை, தெற்கே இலுப்பூர் - அரிகரன்கூடல், வடக்கே நெடுவாசல் - பெருஞ்சேரி முதலிய பழைய பாடல்பெற்ற ஊர்களும் அமைந்துள்ளன. எனவே கிடைத்த சான்றுகளின்படி தொன்மையான ஊர்களுள் சங்கரன்பந்தலும் இடம் பெறுகிறது எனலாம்.

## இலம்பையங்கோட்டூர்

ஞானசம்பந்தரின் நற்றமிழ் போற்றும் இலம்பையங்கோட்டூர் கூவத்திற்குத் தென்மேற்கே இரண்டு கி.மீ. தொலைவிலும் சென்னை - ஜோலார்பேட்டை இருப்பு வழியில் கடம்பத்தூர் தொடர்வண்டி நிலையத்திலிருந்து தெற்கே 10 கி.மீ. தொலைவிலும் கூவம் ஏரிக்கரையில் அமைந்துள்ள சிற்றூர்.

தேவநாயகசாமி கோயில் என்று இன்று வழங்கப்படும் சிவன்கோயில் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இலம்பயங்கோட்டூருடையார் கோயில் எனப் புகழப்பட்டது. எனினும் கி.பி. 1190-இல் இரண்டாம் இராஜாதிராஜனின் 12-ஆம் ஆட்சியாண்டில் பண்டாரி சிவசரணாலயன் என்னும் மூவேந்தவேளானால் கற்கோயிலாகக் கட்டப்பட்டது. இளம்பையங்கோட்டூர் கோட்டூரான விச்சாதிர சோழச் சதுர்வேதிமங்கலம் என்னும் பெயர் மாற்றம் செய்து பிரமாணர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தது. இது ஜெயங்கொண்ட சோழமண்டலத்துப் புலியூர்க் கோட்டமான குலோத்துங்கசோழவளநாட்டு மணயிற்கோட்டத்தில் அமைந்திருந்தது இக்கோயிலில் இரண்டாம் இராஜாதிராஜன் மூன்றாம் குலோத்துங்கன் சடையவர்மன் சுந்தரபாண்டியன் வீரகண்டகோபாலன் ஆகியோர் கல்வெட்டுகள் உள்ளன.

**தகவல் க. குழந்தைவேலன்**
**மேனாள் கல்வெட்டாய்வாளர்**

# 6

# திருநெல்வேலி அருகில் புதிய கற்காலக் கருவி கண்டுபிடிப்பு

மா. செந்தில் செல்வக்குமரன்
செ. சந்திரவாணன்

திருநெல்வேலி அருகாமையில் உள்ள களக்குடி என்ற ஊரில் புதிய கற்காலக் கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது திருநெல்வேலி மாவட்ட வரலாற்றில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தக் கூடியது எனத் தொல்லியல் அலுவலர் கருதுகின்றார்.

களக்குடி ஏற்கனவே வரலாற்றுச் சிறப்புடைய ஊராகும். கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் இவ்வூரைச் சேர்ந்த மாறன்காரி, மாறன் எயினன் என்ற சகோதரர்கள் பாண்டிய மன்னனின் அரசவையில் முதலமைச்சர்களாய் இருந்துள்ளனர். அவர்கள் ஆனைமலையில் நரசிம்மர் குடைவரைக் கோயிலை எழுப்பியுள்ளனர்.

மேலும், பாண்டியன் அரண்மனை இருந்த உக்கிரன் கோட்டை, ஊராட்சி பற்றிய கல்வெட்டினைக் கொண்ட மானூர் ஆகிய வரலாற்றுப் பெருமை கொண்ட ஊர்கள் களக்குடி அருகில் உள்ளன.

மானூர் பெரிய குளத்தில் பெருகி வரும் மறுகால் தண்ணீர் இவ்வூர் வழியாகச் செல்கிறது. அது ''மறிப்பாறு'', ''மறிச்சிகட்டி ஓடை'' என்று மக்களால் அழைக்கப்படுகின்றது. இவ்வாற்றில் அண்மையில் பெய்த மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுக் கரைகள் அரிப்பெடுத்தன. அந்த அரிப்பில் தான் புதிய கற்காலக் கருவி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இவ்வூரைச் சேர்ந்த முன்னாள் கவுன்சிலர் கணபதி என்பவர் இந்த கல்கருவியினைத் தொல்பொருள் ஆய்வுத் துறையில் ஒப்படைத்தார். அதனின் முக்கியத்துவம் உணர்ந்த தொல்லியல் அலுவலர் மா. செந்தில் செல்வக்குமரன் இதனை ஆய்வு செய்து புதிய கற்காலக் கருவி என்றும், புதிய கற்கால மனிதன் வாழ்ந்ததற்கான தடயம் இது என்றும் தெரிவித்தார். இந்த ஆதாரத்தின் மூலமாக 5,000 ஆண்டுகளுக்கு முன்பே களக்குடியில் மனிதர்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை உறுதி செய்ய முடிகிறது.

மேலும், குற்றாலம் காப்பாட்சியர் சொ. சந்திரவாணன், தொல்லியல் அலுவலர் மா. செந்தில் செல்வக்குமரன் ஆகியோர் புதிய கற்கால கருவி கண்டெடுக்கப்பட்ட ஆற்றங்கரையில் தொடராய்வு மேற்கொண்டனர். இந்த தொடர் கள ஆய்வில் கல்வெட்டு படியெடுப்பவர் செ. உலகய்யா மற்றும் வரலாற்று விழிப்புணர்வு மையச் செயலாளர் பே. அருண்பிரசாத் மற்றும் வரலாற்று விழிப்புணர்வு மைய மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர். இது குறித்துத் தொல்லியல் துறை முதன்மை ஆணையர் சீதாராம் குருமூர்த்தி அவர்கள் கூறுகையில் தொல்லியல் ஆய்வாளர் அடங்கிய குழு களக்குடிப் பகுதியில் கள ஆய்வு மேற்கொண்டு அறிக்கையினைச் சமர்ப்பிக்கும் எனத் தெரிவித்தார். இப்பகுதியில் தொல்லியல் சான்றுகள் மேலும் கிடைப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக அவர் கருதுகிறார்.

## காரையூர்த் தலைவன் உத்தமசோழன்

ஈரோடு மாவட்டம் காங்கயம் வட்டம் மடவிளாகம் என்ற ஊரில் சிவன் கோயிற்சுவரில் கட்டளைக் கலித்துறைப் பாடல் உள்ளது.

"சரங்கொண் டிலங்கை சமைத்தபெற் றாண்டரி யாரிறைஞ்ச
உரங்கொண்ட காரைமன் னுத்தம சோழன் னுபையபுய
மிரங்கும் படியருளான்மட வீரினியென் னுயிரைக்
குரங்கின் கையிற் பட்ட பூமாலை யாக்குங் குளிர்த்தென்றலே"

தலைவன் மீது மையல் கொண்ட தலைவி "பெண்களே! இராமனைப் போன்று பகைவர்களும் வணங்கும் காரையூர்த் தலைவன் உத்தமசோழன் அவனது இருதோள்களையும் எனக்கு அருளவில்லை. இதோ தென்றல் வீசுகிறது அது என் உயிரைக் குரங்கின் கையில் கிடைத்த பூமாலை போலச் சிதைக்குமே என் செய்வேன்" என்று தென்றலைச் சாடுவதாக இப்பாடல் உள்ளது.

7

# இராபர்ட் புரூஸ் பூட் கல்லறை

ச. செல்வராஜ்
தொல்லியல் அலுவலர்

இந்தியத் தொல்பழங்காலத்தின் தந்தை என வரலாற்று ஆர்வலர்களும். தொல்லியல் வல்லுநர்களும் அன்புடன் அழைத்த இராபர்ட் புரூஸ் பூட் அவர்களின் கல்லறை சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், ஏற்காட்டில் அமைந்துள்ள தூய டிரினிட்டி தேவாலயத்தின் இடது பகுதியில் கண்டறியப்பட்டது.

இந்தக் கல்லறையில் சிலுவை உருவமைத்து அதன் கீழே நீள் சதுர அமைப்பில் அடித்தளம் ஏற்படுத்தி அதில் இராபர்ட் புரூஸ் பூட் அவர்களின் பிறப்பு இறப்புச் செய்திகளைக் கல்வெட்டாகப் பொறித்துள்ளனர்.

இராபர்ட் புரூஸ் பூட் F.G.S. அவர்கள் 1834-ஆம் ஆண்டு செல்டன்ஹாமில் (CHELTENHAM) பிறந்தார். இவர் தனது இளம் வயதில் கி.பி. 1858இல் மத்திய நிலவியல் ஆய்வுத் துறையில் (Geological Survey of India) நில அளவையாளராகப் பணியில் சேர்ந்தார். கி.பி. 1891-ஆம் ஆண்டு முதுநிலைக் கண்காணிப்பாளராகவும் பின்னர் துணை இயக்குநராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

இவர் தமிழகத்தில் முதன்முதலாக சென்னைக்கு அருகே பல்லாவரத்தில் பழைய கற்காலக் கருவிகளைக் கண்டறிந்தார். வடஇந்தியாவில் சோகன் பள்ளத்தாக்கில் காணப்பட்ட கல்லாயுதங்களுடன் ஒப்பிட்டு இதனைச் சென்னை கைக்கோடரி மரபு வகையைச் சார்ந்தது (Madras Stone Industry) என உலகிற்கு எடுத்துரைத்தவர் ஆவார்.

மேலும் பூண்டி அருகே அத்திரம்பாக்கம், பரிக்குளம் போன்ற பல இடங்களில் கள ஆய்வை மேற்கொண்டு பழைய கற்காலம் மற்றும் புதிய கற்காலத்தைச் சார்ந்த கைக்கோடரிகள், கல் ஆயுதங்கள் காணப்படுவதையும் வரலாற்று உலகிற்கு தெரியப் படுத்தியவர் ஆவார்.

இராபர்ட் புரூஸ் பூட் தென்னிந்தியத் தீபகற்பப் பகுதியில் கண்டுபிடித்த 459 வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பகுதிகளில் 42 பகுதிகள் பழைய கற்காலத்தையும் (Palaeolithic sites) 252 பகுதிகள் புதிய கற்காலத்தையும் (Neolithic sites) சார்ந்தவை யாகும். மேலும் திருநெல்வேலி மாவட்டத்தில் தேரி பகுதிகளில் நுண்கற்காலக் கருவிகளைக் கண்டெடுத்து அப்பகுதியில் நுண்கற் காலத் தொழிற்சாலை இருந்தமையை உறுதிப்படுத்தியுள்ளார். பழைய கற்கால, புதிய கற்காலக் கல் ஆயுதங்களை அதன் உருவமைப்பு மற்றும் தொழில்நுட்ப முறையைக் வகைப்படுத்தும் பணியையும் மேற்கொண்டார். தென்னிந்தியாவில் பழைய கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்குமிடையேயுள்ள நீண்ட இடைவெளியைக் கண்டறிந்து, அதற்கான காரணத்தை அறியும் பொருட்டு மேற்கொண்ட அவரது ஆய்வு சிறப்பு வாய்ந்ததாகும்.[1]

இவர் சேலம் மாவட்டத்தில் கி.பி. 1889இல் சேர்வராயன் மலைப் பகுதியை முழுவதும் ஆய்வு செய்துள்ளார்.

சேலம் மாவட்டம் மலைகளால் சூழப்பட்ட பகுதியாகும். சேலம் மாவட்டம் சேலத்தில் இருந்து சுமார் 32 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது ஏற்காடு. இப்பகுதி ஓர் இயற்கை எழில் கொஞ்சும் கோடை வாசஸ்தலமாக திகழ்ந்து வருகின்ற பகுதி ஆகும். இந்த ஏற்காட்டுப் பகுதியில் ஆங்கிலேயர்கள் பலரும் விரும்பி வந்து தங்கி உள்ளனர். அதுபோல இராபர்ட் புரூஸ் பூட் அவர்களும் இங்கு தங்கி இங்குள்ள மலைக் கிராமங்களை ஆய்வு செய்தார். ஆய்வில் பல கிராமங்களில் புதிய கற்காலக் கல்லாயுதங்கள் காணப்படுவதைக் கண்டறிந்து குறித்துள்ளார்.

மேலும் கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர், கப்பலவாடி போன்ற பகுதிகளிலும் புதிய, பழைய கற்காலக் கருவிகள் காணப் படுவதைக் குறித்துள்ளார். தற்பொழுது மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் பல இவர்களின் குறிப்பின் முன்னோடியாக அமைத்தே ஆய்வை மேற்கொண்டு அதன் வரலாற்று உண்மையை வெளிக் கொணருகின்றனர்.

அத்தகைய பெருமகனார் ஏற்காட்டில் தன் குடும்பத்துடன் தங்கி சிலகாலம் வாழ்ந்துள்ளார். கி.பி. 1910 சூலை 14ந் தேதி இவரது மனைவி எழிஸா மெலிஸ பூட் காலமானார். அவரை ஏற்காடு தூய டிரினிட்டி ஆலயத்தின் இடது பக்கத்தில் அதாவது கி. பி. 1876-ஆம் ஆண்டு இராபர்ட் புரூஸ் பூட் அவர்களுக்கும்

பின்னர் ராபர்ட் புரூஸ் பூட் தான் வாழ்ந்த காலத்தில் தொடர்ச்சியாகப் பல ஆய்வுகளை மேற்கொண்டார். இறுதியாகக் கொல்கத்தாவில் இருந்த பொழுது தனக்கு ஏற்பட்ட இருதயவலியால் அவர் இறந்தார். அவர் இறப்பதற்கு முன் தன் மனைவியின் கல்லறைக்கு அருகிலேயே தன்னையும் அடக்கம் செய்ய வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கொல்கத்தாவில் கி.பி. 1912 டிசம்பர் 29ம் தேதி இறந்த இராபர்ட் புரூஸ் பூட் அவர்களை தகனம் செய்து அஸ்தியை சேலம் மாவட்டம் ஏற்காடு தூய டிரினிட்டி ஆலயத்திற்கு சனவரி 3ந்தேதி எடுத்து வந்து அவரது கோரிக்கையின் பேரில் அவரது துணைவியார் கல்லறைக்கு அருகிலேயே அடக்கம் செய்து கல்லறையை எழுப்பி உள்ளனர்.

கல்லறையில் காணப்படும் வாசகமாவது:-

ROBERT BRUCE FOOTE
F.G.S. F.M.U.
LATE SUPERINTENDENT
GEOLOGICAL SURVEY OF INDIA
BORN: CHELTENHAM
22nd SEPTEMBER 1834
DIED CALCUTTA 29th DECEMBER 1912
I HAVE FOUGHT A GOOD FIGHT
I HAVE FINISHED MY COURSE
I HAVE KEPT THE FAITH

என்று பொறிக்கப்பட்டுள்ளது.

மேலும் அருகில் அமைந்த அவரது துணைவியாரின் கல்லறையில் காணப்படும் வாசகமாவது:-

In Fond Memory of
ELIZA MELISSA FOOTE
THE BELOVED WIFE OF ROBERT BRUCE FOOTE
LATE OF THE GEOLOGICAL SURVEY OF INDIA
BORN 5th NOVEMER 1841 DIED 13th JULY 1910.

எழிஸா மெலிஸவிற்கும் பிறந்த குழந்தை எழிஸா மெலிஸாவெல் அடக்கம் செய்த இடத்திற்கு அருகிலேயே இவரது துணைவியார் அவர்களையும் அடக்கம் செய்துள்ளனர்

இந்த தூய டிரினிட்டி தேவாலயத்தில் திருமணப் பதிவேடு மற்றும் கல்லறைப் பதிவேடு ஆகியவை பராமரிக்கப்பட்டு வருகின்றது. அப்பதிவேட்டினை ஆய்வு செய்த போது இராபர்ட் புரூஸ் பூட் அவர்களது இறப்பும், அவரது துணைவியார் இறப்பும் பதிவு செய்யப்பட்டுள்ளது அறியப்பட்டது

1. கல்வெட்டு காலாண்டிதழ் 53; 'இந்திய தொல்பழங்காலத்தின் தந்தை இராபர்ட்புரூஸ் பூட்' எஸ். ஸ்ரீகுமார், தொழில் நுட்ப உதவியர்.

## மரக்கதவில் எழுத்துப் பொறிப்பு

கல்வெட்டு முனைப்புத் திட்டத்தின் கீழ் திருச்சி மாவட்டத்தில் கல்வெட்டுப் படியெடுக்கும் பணியின் போது லால்குடி வட்டம் லால்குடி சப்தரீஷீஸ்வரர் கோயிலில் மரக்கதவில் எழுத்துப் பொறிப்பு உள்ளது கண்டறியப் பட்டது. வெள்ளி வாகன அறையில் அமைந்துள்ள மூன்றடி அகலமும் பத்தடி உயரமும் கொண்ட மரக்கதவில் 2 வரிகளில் எழுத்துப் பொறிப்பு உள்ளது.

1. கல்லியாப்தம் ருதிரெகாரிஹூ
2. சகூகூசு வயிகாசி மீ' ௰க உ.

கலியாப்தம் 4964 ருத்ரோத்காரி ஆண்டு வைகாசி மாதம் பதினொன்றாம் தேதி அதாவது கி.பி. 1863-ல் இந்த வெள்ளி வாகன மண்டப மரக்கதவு செய்தளிக்கப்பட்டிருக்கிறது என்பது அறியப்படுகிறது.

கருங்கல், ஓலைச்சுவடி, செப்புத்தகடு, சுட்ட செங்கல் மற்றும் மரம் ஆகியவற்றில் செய்திகளைப் பொறிக்கும் பழக்கம் உள்ளது. இவற்றுள் செங்கல் மரம் ஆகியவற்றில் அரிதாகவே காணப்படுகின்றது. ஆனால் மிகப் பிற்காலத்தில் கூட மரக்கதவில் எழுத்துகள் பொறிக்கப்படும் மரபு உள்ளதை இதனால் அறிகிறோம். குத்தாலம் சொன்னவாறறிவார் கோயில் கோபுர நிலைக் கதவிலும் எழுத்துப் பொறிக்கப்பட்டுள்ளது என்பது நினைவு கூரத்தக்கது.

கள ஆய்வில் கண்டறிந்தவர்கள்: திருமதி அர. வசந்தகல்யாணி, சிறப்பு நிலைக் கல்வெட்டாய்வாளர், சென்னை. திரு. கோ. முத்துச்சாமி, காப்பாட்சியர், தரங்கம்பாடி.

# 8

# குமரி முட்டம் கல்வெட்டில் இசுலாமியப் பள்ளி

தே. கோபாலன்
நாகர்கோவில்

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம் கன்னியா-குமரிக்கு வடகிழக்கே $1\frac{1}{2}$ கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது சின்னமுட்டம் எனும் சிறிய கிராமம். இக்கிராமத்தில் இரண்டு தூண் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு கல்வெட்டு கொல்லமாண்டு 699-இல் பொறிக்கப்பட்டது. இதற்கு இணையான கிறித்துவ ஆண்டு கி.பி. 1523

**கல்வெட்டு வாசகம்**

1. கொல்லம் 69
2. 9 ஸ்ரீ சித்திரை மாதம் 15 உ
3. குமரி முட்டத்தில் பள்ளி
4. க்கு விளக்கு வைக்கும் ப
5. டி வெளிச்செண்ணைக்கு
6. மேற்படி துறையில் கட
7. மை வகையில் மடிவலை
8. ஒன்றும் வாளைவலை ஒன்
9. றும் சாளைவலை ஒன்றும்
10. சணவலை ஒன்றும் குமரி
11. முட்டம் கோவை குளத்தி
12. ல் துறையில் ஏற்று இ[ற]க்கு
13. உரு ஒன்றுக்கு பணம் ஒ
14. ன்றாகவும் விலை விற்ற ச
15. ம்பானுக்கு பணம் ஒன்

## இரண்டாம் பக்கம்

16. றாகவும் நெல்
17. லு எடுப்பும் ம
18. ற்றுள்ள சுவாந்
19. திரியமும் எடுத்
20. துக் கொள்ளும்
21. படியும் மேற்ப
22. டி துறையில்
23. பிடுத்து வருகிற
24. மீன் எடுப்பு எடு
25. த்துக் கொள்ளு
26. ம் படியும் இந்த
27. நாலெல்லைக்கு
28. [ள்ளி]ருக்கிறவர்க
29. ளொடு இடங்கை
30. க வலங்கை ப

## மூன்றாம் பக்கம்

31. லிசை ... ப
32. டைப் பணம் பிரிசண்ட
33. காணிக்கை மற்றும் பல வி
34. ரோதமும் தவிர்த்து இய்வ
35. ண்ணமே நடத்திப் போ
36. தும்படி பள்ளிக்கு மோ
37. தீனுக்கும் அருளிச்செயல் ப
38. டி நால் எல்லைக்கும் சங்
39. கேதமாக ஆயெந்திரதா
40. ரவச் சந்ததிப் பிறதேச
41. மே கல்லுவெட்டி நாட்

42. டினமைக்கு அருளிச்செ
43. ய[ல்]படி கல்வெட்டினேன்
44. நாம் யிலக்கித்தாப் பே
45. ஈலே நம்முளோரும்
46. இலக்[கிக்]கவும்

### கல்வெட்டு கூறும் செய்தி

குமரி முட்டம் கோவைக்குளம் துறைமுகத்தில் மீன்பிடிக்க வசூலிக்கப்பட்ட வரி, படகுகளுக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் மற்றும் பொருளாகக் கொள்ளப்பட்ட மீன் மற்றும் நெல் ஆகியவை உள்ளிட்ட மொத்த வருவாயிலிருந்து இங்குள்ள இசுலாமியப் பள்ளிக்கு விளக்கெரிக்கத் தேங்காய் எண்ணையும் (வெளிச் செண்ணை) பள்ளியில் வாங்கா வாசிக்கும் மோதினுக்கும் கொடை வழங்கியதை இக்கல்வெட்டு செய்தியாகத் தெரிவிக்கிறது.

மேலும், குமரி முட்டம் நான்கெல்கைக்கு உட்பட்ட எல்லைக்குள் இருக்கிறவர்களோடு வலங்கை, இடங்கையார், படைப்பணம், பிரிசண்ட காணிக்கை ஆகியவற்றிற்குக் கொடை வழங்குவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டதையும் இக்கல்வெட்டு குறிக்கிறது.

### வலைகள்

மீனவர்கள், மீன் பிடிப்பதற்காகப் பயன்படுத்தும் மடிவலை வாளை வலை. சாளை வலை, சணவலை ஆகிய வலைகளைக் குறிப்பதுடன் ஒவ்வொரு வலைக்கும் வசூலிக்கப்பட்ட வரி வருவாயி லிருந்து பள்ளிக்கு கொடை வழங்கியதைக் கல்வெட்டு தெரிவிக்கிறது. ஏற்றுமதி, இறக்குமதிக்காகப் பயன்படுத்தப்பட்ட படகுகள் சம்பான், உரு என்ற பெயர்களால் அழைக்கப்பட்டதை இக்கல்வெட்டு குறிக்கிறது. ஒரு பணம் வீதம் சம்பான், உருவுக்கு வரி வசூல் செய்யப்பட்டுள்ளது.

### இசுலாமியப் பள்ளி

பள்ளிக்கும், மோதினுக்கும் கொடை வழங்கியதாக இக்கல்வெட்டு குறிக்கிறது. இசுலாமியப் பள்ளி வாசல்களில் வாங்கா வாசிப்பவர் 'மோதீன்' என அழைக்கப்படுகிறார். எனவே, குமரி முட்டத்தில் இருந்த பள்ளி ஓர் இசுலாமியப் பள்ளி என்பது

இதன்மூலம் உறுதியாகிறது. கீழைக் கடற்கரையில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வணிகத் தொடர்பு கொண்டிருந்த அரபு வணிகர்களுக்காக இப்பள்ளி நிறுவப்பட்டிருக்கலாம்.

**காலம்**

இக்கல்வெட்டு பொறிக்கப்பட்ட ஆண்டு கொல்லம் 699. இதற்கு இணையான கிறித்துவ ஆண்டு கி.பி. 1524. இக்காலத்தில் குமரி முட்டம் உள்ளடங்கிய பகுதி வேணாட்டரசர் பூதல வீர ஸ்ரீ உதைய மார்த்தாண்டவர்மா (கி.பி. 1516-1535) ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. இம்மன்னனுக்கு 'வென்று மண்கொண்ட' என்ற பட்டப் பெயரும் உண்டு. இவன் சோழ இளவரசியை மணம் முடித்துக் கொண்டதாலும், சோழர்களின் இலச்சினையான புலியைப் பயன்படுத்திக் கொண்டதாலும் புலி மார்த்தாண்டன் என அழைக்கப்பட்டான். வீரப்புலி அணை இவன் காலத்தில் கட்டப்பட்டது. சுசீந்திரம் கோயிலில் உதைய மார்த்தாண்ட விநாயகரை நிறுவியவனும் இவனே. இக்கோயிலில் தன் பேரால் 'உதைய மார்த்தாண்டன் சந்தி' என்ற பூசையை ஏற்படுத்தினான். குமரி முட்டத்தில் ஓர் இசுலாமியப் பள்ளிக்கு கொடை கொடுத்ததன் மூலம் இம்மன்னனது சமய நல்லிணக்க எண்ணம் வெளிப்படுகிறது.

குமரி முட்டத்திலுள்ள மற்றொரு தூண் கல்வெட்டு கொல்லமாண்டு 701-இல் நிறுவப்பட்டதாகும். இதற்கு இணையான கிறித்துவ ஆண்டு கி.பி. 1525. முதல் கல்வெட்டு நிறுவப்பட்ட இரண்டு ஆண்டுகள் கழித்து இக்கல்வெட்டு நிறுவப்பட்டுள்ளது.

**கல்வெட்டு வாசகம்**

1. கொல்லம் 701 ஞ
2. பங்கூனி மாதம் 20 வ தம்பிரானார்
3. சிறவாய் மூத்த தம்பிரானார்
4. திருவுள்ளம் பற்றி முட்டத்தில்
5. துறையில் குடி மக்களில்
6. மூத்தகங்கள் இளையகங்கள்
7. உள்ளிட்டாற்கு அடிபிடி அனி
8. யாயம் புன்கோசனம் பெறா
9. ப் பேறு மீன் பறிக்குதல் தவி

10. ர்த்தமைக்கு அஞ்சினா[ன்] பு
11. கலிடமாக குடி கிடந்
12. து கொள்ளவும்

இக்கல்வெட்டு கூறும் செய்தியாவது; மீன் பறித்தல் உள்ளிட்ட அடிபிடி அநியாயம் செய்து வந்தவர்களிடமிருந்து முட்டம் துறையிலுள்ள மூத்தகங்கன், இளையகங்கன் உள்ளிட்ட முடிமக்களைப் பாதுகாத்து அவர்களுக்குக் குடியிருந்து கொள்ள இடமளிக்க அனுமதித்து மன்னன் வெளியிட்ட ஆணையை இக்கல்வெட்டு குறிக்கிறது. முதல் கல்வெட்டுக்கருகிலேயே இக்கல்வெட்டும் கண்டறியப்பட்டதால் அஞ்சினான் புகலிடமாக அளிக்கப்பட்ட இடம் முதல் கல்வெட்டில் குறிப்பிட்டுள்ள இசுலாமியப் பள்ளியே எனக் கொள்ளலாம். ஏதோவொரு சூழலில் பாதுகாப்பற்ற வர்களுக்குப் பாதுகாப்பாகக் குடியிருக்க அளிக்குமிடமே 'அஞ்சினான் புகலிடம்' எனக் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

இக்கல்வெட்டில் 'மூத்தகங்கன்', 'இளையகங்கன்' என்ற பெயர்கள் குறிக்கப்படுகின்றன. 'கங்கன்' என்பது பரதவ சமூகத் தலைவர்களின் பட்டமாகும்.

குமரி முட்டத்தில் கிடைத்துள்ள இவ்விரு கல்வெட்டுகளின் மூலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் அங்கிருந்த பள்ளி ஓர் இசுலாமியப் பள்ளியென்பது தெளிவாகிறது. தற்போது இவ்விரு தூண் கல்வெட்டுகளும் பத்மனாபபுரம் அரண்மனை அருங்காட்சியக் காட்சிக் கூடத்தில் வைக்கப்பட்டுள்ளன.

**கல்வெட்டு குறிக்கும் பிற சொற்கள்**

**படைப்பணம்**

இக்கல்வெட்டில் குறிக்கப்பெறும் படைப்பணம் என்பது படைவீரர்களுக்கு வழங்கப்படும் பணம் (ஊதியம்) ஆகும்.

***பிரிசண்ட காணிக்கை***

இது பிரசாத காணிக்கை என்றும் வழங்கப்படும். இது அரசன் திருமுகத்தின் பொருட்டுச் செலுத்தும் ஒரு வகை வரியே. இங்கு திருமுகம் என்பது இறைவனின் ஆணை கொண்ட ஓலை எனப் பொருள் கொள்ளலாம்.

**சங்கேதம்**

**வேணாட்டார் மரபில் கோயில் நிலங்கள் "சங்கேதம்" என்றும், அரசு நிலம் "பெரும்பற்று" என்றும் குறிப்பது வழக்கம்.**

இக்கல்வெட்டு குமரி முட்டம் நான்கெல்லைக்கு உட்பட்ட பகுதியை சங்கேதமாகக் குறிக்கிறது. இது இப்பள்ளிக்குக் கொடையாக வழங்கப்பட்ட ஊராகக் கொள்ளலாம்.

***துணை நின்ற நூல்கள்***


1. TAS Vol VI-Part II, A.S Ramanatha Ayyar, Govt. of Travancore Trivandrum, 1927 No: 128 P: 179-180.
2. A Survey of Kerala History, Sreedhara Menon.
3. Kerala Society Papers "Forts at Kalkulam and Udayagiri" by Kavimoni Desika Vinayagam Pillai.


***தகவலாளர்***

*திரு. எஸ். இராமச்சந்திரன், கல்வெட்டாய்வாளர் (ஓய்வு), தொல்லியல் துறை, சென்னை-8 (குமரி முட்டம் பள்ளி ஓர் இசுலாமியப் பள்ளி என இனம் காட்டியவர்).*

## நெல்லையில் கரும்புச் செக்கு கண்டுபிடிப்பு

அண்மையில் ஸ்ரீவைகுண்டத்தில் கல்வெட்டுள்ள ஒரு கரும்புச் செக்கு வயல் ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சர்க்கரை பழமையானது; சர்க்கரைப் பொங்கலும் பழமையானது தான். இரண்டுமே தமிழக தெய்வங்களுக்குப் படைக்கப்படும் நெய்வேத்தியங்கள். சர்க்கரைப் பொங்கல் இல்லாமல் பொங்கல் திருநாள் இல்லை. கரும்பிலிருந்து சாறு எடுத்துத்தான் சர்க்கரை தயாரிக்கின்றனர்.

எள்ளிலிருந்து எண்ணெய் எடுப்பதற்கு கல் செக்குகள் இருந்திருக்கின்றன என்பதை அனைவரும் பார்த்திருக்க வாய்ப்புண்டு. கரும்பிலிருந்து சாறு எடுப்பதற்கும் கற்செக்குகள் இருந்திருக்கின்றன. இந்தத் தொன்மை தொழில் நுட்பத்தைக் கூறும் கரும்புச் செக்குகள் எண்ணெய்ச் செக்கின் வடிவத்திலிருந்து முற்றிலும் மாறானது. கரும்புச்சாறு வடிந்து கீழே வருவதற்கான தனிக்காடியும் துளையும் காணப்படுகின்றன. வடிந்து வரும் சாற்றைப் பாத்திரங்களில் சேமித்துச் சர்க்கரை காய்ச்சியுள்ளனர். இந்தச் செக்கு ஒரு வயலில் இருப்பதால் அந்த வயல் சக்கடி வயல் என்று அழைக்கப்படுகின்றது. இந்த கரும்புச்செக்கு கைலாசநாதர் கோயிலுக்குச் சொந்தமானது. கோயிலின் தேவைக்காக மட்டுமே அதில் கரும்பு அரைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர வேறு பயன் பாட்டிற்காகக் கரும்பு அரைத்தால், அப்படி அரைப்பதற்கு ஒரு துலாம் சர்க்கரையைக் கோயிலுக்காக வழங்க வேண்டும் என்று கல்வெட்டு குறிப்பிடுகின்றது. அப்படிக் கோயிலுக்கு வழங்காது போனால் அவர்களுக்குப் பாவம் வந்து சேரும் என்று கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இந்தக் கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு இது 400 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கருதலாம். தமிழகத்தில் கரும்புச் செக்கில் கல்வெட்டுக் கண்டுபிடிக்கப்பட்டது இதுவே முதன்முறை.

**தகவல் முனைவர் மா. செந்தில்செல்வகுமரன்**

# 9 கீழக்கல்லூர் படித்துறைக் கல்வெட்டு

**செ. உலகையா**
கல்வெட்டு படியெடுப்பவர் மற்றும் படிப்பவர்
திருநெல்வேலி

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வட்டத்தில் அமைந்திருக்கும் சிற்றூர் கல்லூர் ஆகும். கீழக்கல்லூர் கிராமத்தின் வடபுறம் கீழ்மேலாகக் கன்னடியன்(கால்) வாய்க்கால் செல்கின்றது. கன்னடியன் வாய்க்கால் விவசாயத்திற்கு மட்டுமல்லாமல், குளிப்பதற்கும் துணிகள் துவைப்பதற்கும், கால்நடைகளைக் குளிப்பாட்டுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. குறிப்பாக கிராமத்து மக்கள் தங்களுடைய பல தேவைகளுக்கும் இவ்வாய்க்கால் தண்ணீரைப் பயன்படுத்துகின்றனர், வாய்க்காலில் இறங்கிக் குளிப்பதற்கு வசதியாகப் படிக்கட்டுகள் அமைக்கப்படுவது வழக்கமாகும்.

கீழக்கல்லூர்ப் பகுதியில் கன்னடியன் காலில் சிவன் கோயிலுக் கருகில் ஒரு படிக்கட்டு அமைக்கப்பட்டுள்ளது. அங்கு நடப்பட்டுள்ள ஒரு பலகைக்கல்லில் இப்படிக்கட்டு அமைக்கப்பட்ட செய்தி பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு அக்காலச் சமூக வரலாற்றை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

இவ்வூர் கீழக்கல்லூர் என்று அழைக்கப்பட்டாலும். கல்வெட்டில் "சிலாபுரி" என்று குறிப்பிடப்படுகின்றது. ஒரு காலத்தில் இவ்வூரில் வேளாளர் அதிகம் வாழ்ந்துள்ளார்கள். அவர்களால் போற்றிப் பாதுகாக்கப்பட்ட செங்கோல் மடமும் இன்றளவும் இங்கு உள்ளது. இம்மடத்தின் பொறுப்பில் தான் கைலாசநாதர் கோயில் உள்ளது. இச்சிவன் கோயிலின் வழிபாடுகள் இம்மடத்தால் நடத்தப் பெற்று வந்துள்ளன. தற்பொழுது இக் கோயில் வழிபாடின்றிப் பாழடைந்து கிடக்கின்றது.

படித்துறைக் கல்வெட்டு கொல்லம் 1066-ஆம் ஆண்டு (கி.பி. 1891) படிக்கட்டு கட்டப்பட்டதைத் தெரிவிக்கிறது. இந்தப் படிக் கட்டைத் திரவியம் பிள்ளை அவர்கள் மகளும் நயினார் பிள்ளை அவர்களுடைய மனைவியுமான பூலாவுடையம்மாள் என்பவர் கட்டி வைத்தார். மேலும் அந்தக் கல்வெட்டில் பூலாவுடையம்மாள் தன்னுடைய சொந்தச் செலவில் பிள்ளைமார்கள் பயன்பாட்டிற்காகக் கட்டி வைத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 19-ஆம் நூற்றாண்டின்

இறுதியில் பிள்ளைமார் சமூகம் செல்வாக்குப் பெற்று இருந்ததையும் பெண்கள் தங்கள் சொந்தச் செலவில் தர்ம காரியங்கள் செய்வதற்கு உரிமை பெற்றிருந்ததையும் இக்கல்வெட்டு தெளிவுபடுத்துகின்றது. மேலும் குறிப்பிட்ட இனத்தவர்களுக்காகத் தனிப்பட்ட படித்துறை இருந்ததையும் இதனால் அறியமுடிகிறது.

### கல்வெட்டு வாசகம்

1. வடிவேல் துணை
2. சிலாபுரி யென்று
3. பேர் வழங்கிய கீ
4. ழக்கல்லூரிலிரு
5. க்கும் திருநெல்வே
6. லி இஜறா* திரவியம் பி
7. ள்ளையவர்கள் குமார
8. த்தியும் நயினார்பிள்ளை
9. யவர்கள் ஸ்ரீயுமான
10. பூலாவுடையம்மாள
11. ால் பிள்ளைமார்கள் உப
12. யோகத்திற்காக சொந்
13. தச் சிலவு செய்து இந்த
14. ப் படித்துரை
15. த் தர்மத்தைக் கெட்டிமு
16. டிக்கப்பட்டது. + ௲௯ம்
17. ௯ ம் வைகாசி

---

* 'இஜறா' என்பது 'வகையறா' என்று பொருள்படும்.

# கல்வெட்டில் இறைப் பணியாளர்கள் (அடிமைகள்)

10

**இளமுனைவர். செ. சந்திரவாணன்**
*காப்பாட்சியர் (சி.நி), குற்றாலம்*

கல்வெட்டு முனைப்புத் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் கல்வெட்டுகள் படியெடுக்கும் பணி மேற்மொள்ளப்பட்ட போது தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் வட்டம் அங்கமங்கலம் என்ற ஊர்க் கல்வெட்டில் சில சுவையான செய்திகள் காணக் கிடைத்தன. அவற்றுள் ஒன்று, இக்கோயில் பணிகளுக்காகப் பணியாட்களை விலை கொடுத்து வாங்கிப் பணியமர்த்தியதைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இதே போன்று குற்றாலம் கோயில் கல்வெட்டொன்றும் பணியாட்களை நியமித்த தனைத் தெரிவிக்கின்றது இதைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### அங்கமங்கலம்

திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் செல்லும் சாலையில் சுமார் 25 கி.மீ தொலைவில் குரும்பூருக்கு அருகில் அமைந்துள்ள சிற்றூர்தான் 'அங்கமங்கலம்' ஆகும். கல்வெட்டுகளில் இவ்வூர் 'கங்கைமங்கலம்', 'அங்கமங்கலம்' என்றழைக்கப்படுகின்றது. குரும்பூரிலுள்ள பெருமாள் கோயில் கல்வெட்டொன்றில் 'குடநாட்டுக் குரும்பிலான சிவன்தலைக் கங்கைமங்கலத்து இராசேந்திர நல்லூர்' என்ற தொடர் காணப்படுகின்றது. இது கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் ஓரூரின் பெயரைக் குறித்து நின்றது. குடநாடு என்பது ஒரு நாட்டுப் பிரிவாகும். இந்நாட்டுப் பிரிவில் 'கொற்கை', 'குரும்பூர்', 'அங்கமங்கலம்' முதலான ஊர்கள் உள்ளடங்கியிருந்தன.

### தற்போது ஊர்ப் பெயர்

மேற்சொன்ன தொடரில் வரும் 'குரும்பில்' என்பது தற்போது 'குரும்பூர்' என்றும், 'சிவன்தலை' என்பது 'சுகந்தலை' என்றும், 'கங்கைமங்கலம்' என்பது 'அங்கமங்கலம்' என்றும் 'இராசேந்திர நல்லூர்' என்பது 'நல்லூர்' என்றும் நான்கு சிற்றூர்களுக்குப் பெயராய் வழங்கி வருகின்றது.

### இறைப் பெயர்

இவ்வூர்க் கல்வெட்டுகளில் இறைவன் 'நரசிங்கஈசுவரமுடைய நாயனார்' என்று அழைக்கப்படுகின்றார். மக்கள் பேச்சுவழக்கில் 'நரசிம்ம ஈசுவரர்' என்றே அழைக்கின்றனர். மேற்குப் பார்த்து அமைந்த இச்சிவன் கோயிலில் அம்பாளுக்கென்று தனிக் கோயில் கிழக்குப் பார்த்த நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது அம்பாள் ''ஆவுடையம்மன்'' என்றழைக்கப்பட்டாலும் கல்வெட்டு களில் ''திருக்காமக்காட்டமுடைய நாச்சியார்'' என்றே அழைக்கப் படுகின்றார்.

### கல்வெட்டு

இவ்வம்மன் கோயில் மகாபண்டப வடபுறச் சுவரிலுள்ள கல்வெட்டொன்று சிற்சில இடங்களில் சிதைந்து காணப் படுகின்றது. இது கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. பதினெட்டு வரிகளை உடைய இக்கல்வெட்டின் தொடக்கத்தில் இரு வரிகளில் பாடல் வரிகள் காணப்படுகின்றன. அதனைத் தொடர்ந்து கல்வெட்டில் சக ஆண்டும் அதற்கு இணையான கொல்லம் ஆண்டும் தரப்பட்டுள்ளது. (சகம் 1347-கொல்லம் 601-கி.பி. 1425).

### கல்வெட்டுச் செய்தி

இக்கல்வெட்டு அங்கமங்கலமான வீரபாண்டியன் மடிகை மாநகரத்து நயினார் நரசிம்மீசுவரமுடைய நாயனார் கோயிலில் எழுந்தருளியுள்ள ஆதிசண்டேசுவரர்க்கு 'நெடுவாசல்' என்ற ஊரைச் சார்ந்த 'மருதன் தேவன்' என்பவன் உதகப்பூர்வ தானப் பிரமாணம் பண்ணிக்குடுத்த பரிசினைப் பற்றி கூறுகின்றது.

'உதகப் பூர்வதானம்' என்பது நீர் வார்த்துக் கொடுத்த தானம் என்று பொருள். சில கல்வெட்டுகளில் இச்செயல் ''நீரட்டிக் கொடுத்தல்'', ''நீரோட்டிக் கொடுத்தல்'' எனவும் வரக் காணலாம்.

மேற்சொன்ன மருதன்தேவன் என்பவன் இக்கோயிலில் திருப்பணியும் செய்து மகாபூசையையும் செய்வித்தான் என இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது. மேலும் இவனே மடையும், பணியும் செய்து 'திருவந்திக்காப்பும்' செய்தான் என்று குறிப்பிடு கின்றது. மடையும், பணியும் என எண்ணும்மையுடன் கூறியதன் பொருள். இறைவனுக்குப் படைத்திடும் உணவும் தொண்டும் செய்வது எனப் பொருள்படும். இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும்

'திருவந்திக் காப்பு' என்பது திருவிழாவின் இறுதியில் 'கண்ணேறு' (திருஷ்டி) ஏற்படாதிருக்கச் செய்யும் சடங்காகும். இதனை மக்கள் 'ஆலத்தி கரைத்தல்', 'ஆரத்தி எடுத்தல்' என்பர். இறைவர்க்குச் செய்யும் இச்செயல் ''மஞ்சள் நீராட்டல்'' என்றழைக்கப்படுகின்றது.

இக்கோயில் பணியினைச் செய்வதற்காக இவன் (மருதன் தேவன்) 'அனவரதப் பெருமாள்' என்பவனிடமிருந்து சில நபர்களை விலையாகப் பெறுகின்றான். அவர்களை இக்கோயில் இறைவற்கு உதகப் பூர்வதானப் பிரமாணமாகக் கொடுத்ததைக் குறிப்பிடுகின்றது. இக்கல்வெட்டு, அந்நபர்களை எவ்வளவு விலை கொடுத்துப் பெற்றான் என்று குறிப்பிடப்படாவிட்டாலும் விலையாகப் பெற்றவர்களின் பெயர்கள், உறவுமுறை, ஆண், பெண் என்ற பாகுபாட்டை உணரத்தக்க வகையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

### உறவுப் பெயர்கள்

மேலும் 'இளையர்' என்ற சொல்லும், 'பெயர்த்தி', பேர்த்தி', 'பேற்றி' என்று பேத்தியைக் குறிக்கும் சொல்லும் சிறப்புடையன. பாட்டன்(தாத்தா) அல்லது பாட்டியின் பெயரை உடைய மூன்றாம் தலைமுறை ஆண் பெண்ணிற்கு இடப்பெறும் உறவுப் பெயரே 'பெயரன்' (பேரன்) 'பெயர்த்தி' (பேத்தி) என்றாயிற்று.

அவ்வகையில் இங்கு சுட்டப்படும் பணிமக்கள் பெயர்கள் மொத்தம் எட்டு நபர்களைக் குறித்தன. இதில் ஆண்கள் நான்கு பேர்கள் பெண்கள் நான்கு பேர்களாவர். இப்பெயர்கள் மகன், மகள், பெயர்த்தி, இளையன் என்ற உறவுப் பெயர்களாய் உள்ளன. சில நபர்களின் பெயரினைக் கூறியும் சில நபர்களின் பெயரைக் கூறாது உறவுப் பெயரால் குறிப்பிட்டும் வரக் காணலாம்.

### அக்கல்வெட்டு வரிகள் பின்வருமாறு

'இராம தேவியையும் இவள் மகன் செந்திலையும் இவனுக்கிளைய பேற்றியையும்
இவளுக்கிளைய
அருநிலைக் காத்தானையும் இவனுக்கிளைய பேர்த்தியையும் இவளுக்கிளைய
இளைய...யனையும்
பேற்றி மகள் செல்வியையும் இவளுக்கிளைய காளியப்பனும் ஆக
இவ்வனைவரையும் இந்நாயனாற்கு'

உதகப்பூர்வ தானமாகக் கொடுத்ததைத் தெரிவிக்கின்றது.

மேற்கண்ட கல்வெட்டு வரிகளில் காணப்படுகின்ற சில பெயர்கள் இலக்கியப் பெயர்களைப் போல அமைந்திருந்தாலும் (இராமதேவி, அருநிலைக்காத்தான்) சிலபெயர்கள் தற்போது கையாளப்படும் பெயர்களாகவே உள்ளன. அவை: 'செந்தில்' 'செல்வி', 'காளியப்பன்' என்ற பெயர்களாகும்.

**குற்றாலம்**

முன் சொன்ன கல்வெட்டைப் போன்றே குற்றாலத்திலுள்ள கல்வெட்டொன்றும் பணியாளர்கள் பற்றிய செய்தியைத் தெரிவிக்கின்றது. இக்கல்வெட்டு குற்றாலநாத சுவாமி கோயிலில் உள்ள திருமடைப்பள்ளியின் தென்புறச் சுவரில் உள்ளது. இதில் கோனேரின்மை கொண்டானின் ஆட்சியாண்டு எதிராமாண்டாகக் குறிப்பிடக் காணலாம். இது முப்பத்திரண்டாவதின் எதிராமாண்டு (32+1)புரட்டாசி மாதம் பதினொன்றாம் தேதியிட்ட கல்வெட்டாகும்.

இதில் தென்வாரி நாட்டுத் திருக்குற்றாலத்துத் திருக்குற்றாலமுடைய நாயனார் கோயில் சபையாரிடம் பரிகாரமாகக் குடுத்த பணியாளர்கள் பத்துப் பேர்களைப் பற்றிய செய்தி தரப்பட்டுள்ளது.

'பரிகாரம்' என்பது 'கைம்மாறு' எனப் பொருள் கொண்டால் தாம் செய்ய வேண்டிய பணிக்காகச் சில நபர்களைவிட்டு அப் பணியைச் செய்வதற்காகக் கூறப்பட்டிருக்கலாம். 'நாம் பரிகாரமாக விட்ட நம் ஊர்களில் உள்ள பத்து நபர்களைச் சேகரித்துக் கோயில் சபையாரிடம் பரிகாரமாகக் கொடுத்துக் கையாளக் கற்பித்தமையைத்' தெரிவிக்கின்றது.


'பரிகாரமாக' என்பதைப் 'பரிகாரராக' எனக் கொண்டால் வேலையாட்களாகத் தந்தார் என நேரிடையாகப் பொருள் கொள்ளலாம். பரிகாரர் என்ற சொல்லுக்கு வேலைக்காரர் என்பது பொருள்.

இவ்வேலைக்காரர்களின் பெயர்கள் வழி வழியாக உறவு முறைப் பெயர்களாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை

> சிவந்தாள் மகள் பிராட்டியையும் அவள் தம்பி வயித்தியநாதனையும் இவன் மருமகள் சிவந்தாளையும் இவள் தம்பி உடையானையும்
> இவன் தம்பி நம்பியையும் இவன் தங்கை நல்லாளையும் இவள் தங்கை கமளியையும் இவள் தங்கை என்னை வாத்த
> பெருமாளையும் இவள் பிராட்டியையும் இந்நாயனார்க்குப் பரிகாரமாகக் குடுத்து...

என்று வரக் காணலாம்.


(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்)




...IALS at Trinity Church Cemetery Yercaud

| ...n Buried | Christian | Surname | When died and cause of death | Age | Quality, Trade or Profession, &c. &c. &c. | Where Buried | By whom Buried |
|---|---|---|---|---|---|---|---|
| ...uary 3rd | Robert Bruce | Foote | 1912 Dec 29th Chill & Heart failure | 78 years | Deputy Director of Geological Survey of India (Retired) | Cremated in Calcutta Ashes buried in Trinity Church Cemetery Yercaud | J. F. Spencer Incumbent of Yercaud with Salem |

இராபர்ட் புரூஸ் பூட் கல்லறை மற்றும் இறப்புப் பதிவேட்டின் விளக்கம்.



புதிய கற்காலக் கருவி



கரும்புச் செக்கு

கட்டுரைகளில் சொல்லப்படும் கருத்துகளுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அச்சகத்தில் அச்சிட்டு இத்துறை முதன்மை ஆணையர் முனைவர் சீதாராம் குருமூர்த்தி இ.ஆ.ப. அவர்கள் சார்பாகத் தொல்லியல் அலுவலர் முனைவர் மா.செந்தில் செல்வக்குமரன் அவர்களால் வெளியிடப்படுகிறது.